பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர் 113 இதழ் 27 7-8-1987 (ஆகஸ்ட் 2—ஆகஸ்ட் 9) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

ஆயர்கள் நியமனம்

வெரித்தாஸ், ஜூலை 26 கோட்டாறு ஆயர் பேரருள்திரு மரியானுஸ் ஆரோக்கியசாமி மதுரைப் பேராயராகவும், திண்டிவனம் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருள்திரு எட்வேட் பிரான்சிஸ் மதுரையின் ஒரு பகுதியான புதிய சிவகங்கை மறைவட்டப் புதிய ஆயராகவும் திருத்தந்தையால் ஜூலை 25 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெறிச்சோடிய குருநகர்ப்பகுதி, வல்வெட்டித்துறை அழிவு, ஒவ்வொரு வீட்டிலும் பதுங்கு குழி

ஜனதிபதியிடம் துறவறசபைச் சிரேஷ்டர்கள் தமிழரின் அழிவுகள், வேதனைகளைக் கூறினர்.

ஜூன் 23 முதல் 26ஆம் திகதிவரை, யாழ் குடாநாட்டை நேரிற் பார்வையிட்ட பின், ஜூலை 17ஆம் நாள் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் துறவற சபைச் சிரேஷ்டர்கள் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்து, அவருக்கு யாழ் குடாநாட்டின் உண்மையான நிலையைத் தெளிவுபடுத்தினர். தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதியில், தமிழருக்கு முன்னுரிமை கொடுத்துத் தமிழ் மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வழிசெய்யும்படி கேட்டுக்கொண்டனர்.

ஜூலை மாதம் 17 ஆம் திகதி ஜனதிபதியைச் சந்தித்த துறவற சபைச் சிரேஷ்டர்கள் குழு, தமது அங்கத்தவர்களான அருட் சகோதரிகள் யோசபின் மென்டிஸ், மோட், மாறி டீ லொறெற்ரு, கில்லியன், ஹெலன் ஆகியோர் யாழ்நகர், சுருநகர், வல்வெட்டித்துறை, அச்சுவேலி ஆகிய இடங்களுக்குச் சென்று, நேரிற் கண்ட அரசின் அத்துமீறல்களை விளக்கமாக எடுத்துக் கூறி, நாட்டில் இனப்பிரச்சினை தீர்வதற்கு அரசு கையாளக்கூடிய வழி முறைகளை விளக்கும் மகஜரைக் கையளித்தனர்.

மூன்றுவது ஒப்பரேஷன் லிபரேஷன் யாழ் நகரில் ஏற்படுத்தக்கூடிய அழிவுகளைச் சுட்டிக்காட்டி, இவ்வாறு மக்களை அந்நியமாக்கும் செயல்களை விடுத்து அமைதியைக் காணவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்கள்.

அரசின் செயல்கள் திரித்துக் கூறப்படுவதுபற்றி ஜனதிபதிக்கு முறைப்பாடு செய்தவர்கள் வல்வெட்டித்துறையில் தாம் கண்ணுற்ற அவலங்களை விளக்கிக் கூறியதுடன் இரவில் நடைபெறும் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களால், குருநகர் வாசிகள் வெளியேறியமையையும் எடுத்துரைத்தனர். முழு மகஜரும் 2 ஆம் பக்கத்திற் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

"காத்தவன் காவியம்" அறிமுக விழா

கவிஞர் தேவதாசனுல் யோசவ்வாஸ் முனிவரை காவிய நாயகனுக வைத்துப் பாடப்பட்ட மேற்படி காவியம் கடந்த 12-7-1987 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் யாழ். ஆயர் மேதகு கலாநிதி-வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது வாசகர் அறிந்ததே.

''பங்கு'' மட்டத்தில், மேற்படி காவியம் ஊரான பாஷையூரில், வருகிற 2-8-1987-ம் திகதி, மு. ப. 10.00 மணிக்கு, முதலாவது அறிமுகவிழா, பாஷையூர்ப்பங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், சமீபத்தில் ரோமாபுரியிலிருந்து தாயகம் வந்த வண. பிதா. எல். பி. இராயப்புவும். அருள்திரு எஸ். எச். ஜெபநேசன் அடிகளும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

முன்னாள் மீன்பிடி இலாகா விழாவுக்குத் தலைமை தாங்குவார்கள்.

கவிஞர்-'' கரவை கிழார்'', வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் ஆசிரியர் அ. செபஸ்தியாம்பிள்ளை ஆகியோர் ஆய்வரங்கிற் பங்கு கொள்கின்றனர்.

இதற்கான ஆயத்தங்களைப் பாஷையூர்ப் பங்கு மக்கள் சார்பில் வண. பிதா ஜே. ஏ. பிரான்சிஸ் அடிகளார் செய்து வருகின்றார்.

இரணதீவு, சேனை வெளிவிழா

இன்றைய நாட்டின் சூழ் நிலையிற் சிறப்பாகக் கொண்டாட்டம் நடாத்தாது, செப வழிபாடாக ஒரு நாளை நடத்த வேண்டுமென அங்கத்தினர்களால் ஆலோசிக்கப்பட்டு, அருள் தந்தை கொன்சலஸ் அடிகளாரின் பொறுப்பில் வழிபாடு நடத்தப்பட்டது.

ஆடித்திங்கள் 11ஆம் நாள் சனிக்கிழமையன்று காலைப் பலிப்பூசையுடன் சற்பிரசாத எழுந்தேற்றம் நாள் முழுதும் ஏற்றி வைக்கப்பட்டிருந்தது.

இரணைதீவுக் கிராமத்தின் மூன்று மரியாயின் சேனைப் பிரசீடியங்களும், வேறு பக்திக் கூட்டங்களும் குழுக் குழுவாக நற்கருணை ஆராதனைகளில் முக்கிய கருத்துக்களை முன் வைத்துச் செபித்தனர்.

1. சுதேச குருக்கள் தேவை.
2. மரியாளின் அண்டில், மரி நீதி, அமைதி, சமாதானம் சுதந்திரம் பெற.
3. நாட்டின் பயங்கர நிலை நீங்க.
4. திருச்சபையை ஆள்வோருக்காக.
5. யோசவ்வாஸ் முனிவரின் புனித பட்டத்துக்காக.
6. அகதிகள், சிறைப்பட்டோருக்காக.
7. எங்கள் கிராமத்தைப் பாதுகாத்தமைக்காக நன்றி கூறிச் செபிக்கப்பட்டன.

மாலை நற்கருணை நாதருக்குப் பொதுவழிபாடும், ஆசீர்வாதமும் இடம்பெற்றன. இறுதியாக, மரியாளின் பாடலுடன் விழா அமைதியாகச் சிறப்புடன் முடிவடைந்தது.

தகவல்: தா. செல்வராணி

யம் கடந்த 12-7-1987 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் யாழ். ஆயர் மேதகு கலாநிதி-வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது வாசகர் அறிந்ததே.

''பங்கு'' மட்டத்தில், மேற்படி காவியக் கவிஞர் பிறந்த இவ்விழாவில், சமீபத்தில் ரோமாபுரியிலிருந்து தாயகம் வந்த வண. பிதா. எல். பி. இராயப்புவும். அருள்திரு எஸ். எச். ஜெபநேசன் அடிகளும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

முன்னாள் மீன்பிடி இலாகா பரிசோதகர் எல். பி. பிலிப் ளர் சமாசத்தின் தலைவர் ஆசிரியர் அ. செபஸ்தியாம்பிள்ளை ஆகியோர் ஆய்வரங்கிற் பங்கு கொள்கின்றனர்.


இதற்கான ஆயத்தங்களைப் பாஷையூர்ப் பங்கு மக்கள் சார்பில் வண. பிதா ஜே. ஏ. பிரான்சீஸ் அடிகளார் செய்து வருகின்றார்கள்.

மூன்று மரியாயின் சேனைப் பிரசிடியங்களும், வேறு பக்திக் கூட்டங்களும் குழுக் குழுவாக நற்கருணை ஆராதனைகளில் முக்கிய கருத்துக்களை முன் வைத்துச் செபித்தனர்.

1. சுதேச குருக்கள் தேவை.
2. மரியாளின் ஆண்டில், மரியாயின்மூலம், உலகில்

மாலை நற்கருணை ஆராதனைக்குப் பொதுவழிபாடும், ஆசீர்வாதமும் இடம்பெற்றன. இறுதியாக, மரியாளின் பாடலுடன் விழா அமைதியாகச் சிறப்புடன் முடிவடைந்தது.

தகவல்: தா. செல்வராணி
(ஆசிரியை)
இரணைதீவு.



காத்தவன் காவியம் நூல் வெளியீட்டு விழாவின்போது யாழ் ஆயர் முதற் பிரதியை, யாழ் இலங்கை வங்கிப் பிரதம முகாமையாளர் திரு. எம். கனகரத்தினத்திடம் வழங்குவதையும், நூலாசிரியர் கவிஞர் தேவதாஸ் நடுவில் நிற்பதையும் காணலாம்.

மானிப்பாயிற் செபக் கருத்தரங்கு

ஜூலை 19,

மானிப்பாய், புனித அன்னாள் ஆலயத்தில் தேவதாயுடன் இறையரசைத் தேடுதல் என்ற தலைப்பில் அருள்தந்தை ஜெயசீலன் அடிகளார் தலைமையிற் கருத்தரங்கு ஒன்றுநடைபெற்றது. 70இளைஞர்கள்கலந்து கொண்டனர். கருத்தரங்கு காலை ஒன்பது மணியளவில் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியது. அன்றைய போரும் இன்றைய போரும், போர் ஏற்படக் காரணங்கள், தேவதாய் போரைப்பற்றி அடிக்கடி கொடுத்த காட்சிகள் என்பன போன்ற விபரங்களை மிக நுணுக்கமாகவும் நுட்பமாகவும் எடுத்துக் காட்டிய துமல்லாது, சிரிக்கவைத்து, சிந்திக்கவும் வைத்தார் அருள்திரு ஜெயசீலன் அடிகளார்.

அடுத்து திரு. பங்கிராஸ் அவர்கள் உண்மையான அன்பே நீதியை உருவாக்கும் என்றும், நீதியானது சமாதானத்தைக் கொண்டு வரும் என்றும் வேதாகம வார்த்தைகள் மூலம் விளக்கம் கொடுத்தார். எமக்கு என்னதான் துன்பம் நேரிட்டாலும் மனந்தளராது இறைவனிடமே எமது வேண்டுதல்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் மாஞனது தனது முன்னங்கால்களை எந்த இடத்திற் பதித்துப் பாய்கிறதோ அதே இடத்தில் பின்னங்கால்களையும் வைத்துப் பாய்வது போல், நாமும் இறைவனை நோக்கி முன்னேற வேண்டுமென்றும் சகோதரி லூட்ஸ் ஞானப்பிரகாசம் எடுத்துக் கூறினார். ஈற்றில் மானிப்பாய், துணைப்பங்குத்தந்தை சந்திரன் அடிகளாரின் நன்றியுரையோடு கூட்டம் இனிதே முடிவுற்றது.

தகவல் J. இராக்கினிதேவி,
உடுவில்.

இலவசம்

பழைய பாதுகாவலன் பத்திரிகைகளை எறிந்துவிடாதீர்கள். ஒழுங்காகச் சேர்த்து வையுங்கள். ஒராண்டுப்பத்திரிகையை ஒழுங்காகச் சேர்த்து வைத்திருப்போருக்கு நாம் அறிவித்ததுபோல, அவற்றை ஒரு புத்தகமாக இலவசமாகக் கட்டிக்கொடுப்போம். ஆ-ர்.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண் விழிப்பது வீண்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் மாண்புமிகு ஜனதிபதி அவர்களுக்கு இலங்கைத் துறவறசபைச் சிரேஷ்டர்கள் பேரவை அளித்த மகஜர் - 17 ஜூலை 1987

மாண்புமிகு ஜனதிபதி அவர்களே,

இலங்கைத் துறவறச் சபைகளின் சிரேஷ்டர்கள் பேரவை, எமது தாய்நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் நிலவச் செய்வதற்குத் தாங்கள் எடுக்கும் பிரயத்தனங்களை மதித்து அவற்றை வரவேற்கும் அதேவேளையில், நிலைமைகள் மிக மோசமாகிக் கொண்டு வருவதையிட்டு ஆழ்ந்த கவலையடைகிறோம். வன்முறைகள் எங்கிருந்து வரினும் அவற்றையெல்லாம் கண்டிக்கிறோம் என்பதை முதலிலேயே கூற விரும்புகிறோம்.

1987 ஜூன் 23ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதிவரை, நாம் ஒரு குழுவாக யாழ். குடாநாட்டைத் தரிசித்தோம். அங்கு நாம் கண்ட அப்பாவி மக்கள் அனுபவித்துவரும் துன்பங்களைப் பற்றித் தங்களுக்குத் தெரிவிப்பதுடன், எமது நாட்டுக்குச் சமாதானத்தையும், சாதாரண நிலைமையையும் கொண்டுவரக் கூடிய ஓர் அரசியல் தீர்வை விரைவில் ஏற்படுத்துமாறு தங்களைப் பெரிதும் வேண்டுகின்றோம்.

1. வல்வெட்டித் துறைப் பகுதியில் 'ஒப்பறேஷன் லிபறேஷன்' ஏற்படுத்திய விளைவுகளை நாம் கண்ணுற்றோம். வல்வெட்டித்துறை முழுவதும் இடிபாடுகளாகவும் சனநடமாட்டமற்ற இடமாகவும் காட்சியளிக்கிறது.

2. யாழ் நகரில் ஒவ்வொரு வீட்டிலும் பதுங்கு குழிகள் உள்ளன. இரவு வேளையில் அடிக்கடி நிகழும் ஷெல் தாக்குதல் காரணமாக எத்தனையோ பேர் தூக்கம் கெட்டு உளரீதியான நலிவுகளுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

3. வழக்கமாகக் கலகலப்புடன் காட்சியளிக்கும் மீன்பிடிக் கிராமமான குருநகரையும் தரிசித்தோம். மண்டைதீவு முகாமிலிருந்து ஏவப்படும் ஷெல்கள் காரணமாக அஞ்சு இப்போது சனநடமாட்டமற்றுப் போய்விட்டது.

குடாநாடெங்கிலுமுள்ள மீனவர் பிழைக்க வழியின்றி அல்லற்படுகின்றனர். அவர்களது நேரம் அகதி முகாம்களிலே கழிகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கோயில்கள், ஆலயங்கள், பாடசாலைகள் எல்லாம் அகதி முகாமாகிவிட்டன. இங்குள்ள மக்கள் பகலிற் சிலமணி நேரமே தங்கள் வீடுகளுக்குச் சென்று வருகின்றனர். அவர்களது சாதாரண குடும்ப வாழ்வு சீர்குலைந்துள்ளது.

4. குடாநாட்டு மக்கள் ஆகாயத் தாக்குதலிலும் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகின்றனர். பெரும்பாலும், இவை பிழையான இலக்குகளையே தாக்குகின்றன. இது குடாநாட்டு மக்களை நாட்டின் ஏனைய மக்களிடமிருந்து அந்நியப்படுத்த ஏதுவாயுள்ளது.

5. நாம் தரிசித்த அநேக பாடசாலைகளில் மாணவர் வரவு மிகக் குறைவாகக் காணப்பட்டது. ஒரு பாடசாலையில் 900இல் 12 பேர், மற்றொன்றில் 700இல் 50 பேர். சில பகுதிகளிற் பாடசாலைகள் இயங்கவேயில்லை.

6. மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னோர் இக்கட்டு சம்பளங்கள் காசோலைகள் மூலம் கொடுபடுவதாகும். குடாநாட்டிற் போதிய பணப் புழக்கமில்லாதது மக்களுக்குப் பெருங் கஷ்டத்தைக் கொடுக்கின்றது.

7. இராணுவத்தினர் தமது ஆபரணங்கள், துணிமணிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைக் கொள்ளையடிப்பதால் தாம் அடையும் துன்பம் பற்றியும் மக்கள் முறையிடுகின்றனர். மக்கள் போராளிகளுக்கும் இராணுவத்தினர்க்கு மிடையே அகப்பட்டுள்ளனர். போராளிகளும் அவர்களைப் பல விதங்களிற் கஷ்டப்படுத்துகின்றனர். பெற்றோர் அல்லது முதியோரால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

8. மக்கள் அனுபவித்து வரும் இக்கஷ்ட துன்பங்கள் அவர்களை நாட்டின் பிறபாகங்களிலிருந்து அந்நியப்படுத்துகின்றன.

9. எமக்கு நேரடியாகக் கிடைத்த இந்த அனுபவத்தின்மூலம், நாட்டின் நிலைமைகள் குறித்து எமக்குக் கிடைக்கும் செய்திகள் பெரிதும் திரித்துக் கூறப்பட்டவையென உணரக்கூடியதாயிருந்தது. இது மேலும் மக்களை அந்நியப்படுத்தும்.

10. பேச்சு வார்த்தையின் மூலம் ஏற்படுத்தக் கூடிய ஒரு சமாதானத்தை எத்தனையோ பேர் உண்மையாகவே விரும்புகின்றனர். சமாதானத்தை விரும்பும் பிரசைகள் பலர், வடக்கிலும், தெற்கிலும் உள்ளனர். வன்முறையை நிறுத்தி நல்லெண்ணத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்த ஒரு சமாதான இயக்கத்தைக் கட்டியெழுப்ப முன்வந்துள்ளனர். சிங்கள - தமிழ் மக்களின் ஜனதிபதியாகிய தங்களால் இதனைச் சாதிக்க முடியும் என உறுதியாக அவர்கள் நம்புகின்றனர்.

ஆகவே, பின்வரும் ஆலோசனைகளைக் கருத்திற் கெடுத்துக் கொள்ளுமாறு ஜனதிபதியவர்களை வேண்டுகின்றோம்.

1. யாழ்ப்பாணத்துக்குத் தாங்கள் நேரில் வருகை தந்து பிரசைகள் குழுவினரையும் சமயப் பெரியார்களையும் நேரிற் கண்டு ஜனதிபதி என்ற முறையில் மக்களது நம்பிக்கையைப் பெற முயலவேண்டும்.

2. போராளிகள் பேச்சு வார்த்தைக்கு வர விரும்பாதால், கட்சிச் சார்பற்ற தமிழ் - சிங்கள பிரசைகளின் உதவியுடன் எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு தீர்வைத் தாங்கள் திட்டமிடல் நன்றென ஆலோசனை கூறுகிறோம்.

3. தமிழர் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில், தமிழைத் தேசிய மொழியாக அமுல்படுத்தி, அரச நிலைக்களங்களுடன் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து நடத்த வழி செய்தால் அது ஜனதிபதியவர்களின் பெருந்தன்மையைக் காட்டுவதாயிருக்கும்.

4. 1979 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தின், காரணமாக, வடக்கிற் சமயப் பெரியார்கள் இளைஞரை வழிநடத்துவதிற் பெரும் தடைகளை எதிர் நோக்குகின்றனர். இச் சட்டத்தைத் தயவுசெய்து ரத்துச்செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

5. பாதுகாப்புப் படையினரின் பயிற்சியின்போது அவர்களது உருவாக்கத்தில் துணை செய்யச் சமய குரவர்களை அமர்த்துமாறு ஆலோசனை கூறுகின்றோம்.

6. இறுதியாக, நாம் ஜனதிபதியவர்களைக் கேட்டுக் கொள்வது யாதெனில், மக்களின் உயிரைக் காக்கவேண்டும், எப்பாடுபட்டும் யாழ்நகரை இலக்காகக் கொண்டிருக்கும் 'ஒப்பறேஷன் லிபறேஷன்' மூன்றாவது கட்டத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதே.

தங்களைக் காண, எமக்கு இச் சந்தர்ப்பத்தை தந்த ஜனதிபதியவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இந் நாட்டிற் சமாதானமும் ஒற்றுமையும் நிலவத் தாங்கள் எடுக்கும் முயற்சிக்கு நாம் முழு ஆதரவு அளிப்போமென உறுதி கூறுகின்றோம்.

விடுதலைப் போரிற் பலியான வீரத்துறவி

முத்திப்பேறுபெற்ற ஈடித் ஸ்ரெயின் (எஸ். எம். ஜே.)

யூத இனப் படுகொலை நடாத்திய ஹிட்லரின் ஆட்சியில் ஜேர்மனியில் வாழ்ந்த கார்மேல் சனபத்துறவியான யூத மங்கை ஈடித் ஸ்ரெயின் அண்மையிற் பரிசுத்த தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் ஜேர்மனிய விஜயத்தின் போது முத்திப்பேறு பெற்ற பட்டம் சூட்டப்பட்டு மகிமைப்படுத்தப்பட்டார். இது ஜேர்மனியில் வாழ்ந்துவரும் யூத சமுகத்தினரிடையே சர்ச்சையை ஏற்படுத்திய சம்பவமாக உலகச் செய்தியில் அடிபட்டது பலருக்கு ஞாபகமிருக்கலாம். இந்தப் புனிதையின் வரலாறு நம்மிற் பலருக்குத் தெரிந்திருக்காது. அதைச் சுருக்கமாக இங்கு தருகிறோம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

1921ஆம் ஆண்டுவரை பேராசிரியர் ஹுசலின் உதவியாளராகப் பணியாற்றினார். அவர்கள் வேறிடம் சென்றபோது அவர்கள் இல்லத்திற் சில நாள்கள் தங்கியிருந்தாள் அவளது ஞானப்பெற்றோராகினர். அவளது விருப்பப்படி "தெரேசா" எனப் பெயர் மிடத்தில் அமைந்திருந்த புனித மக்டலீன் டொமினிக்கன் கன்னியர் மடந்தான் கனெனச்சுவின்ட் அடிகளாரால் ஈடித்துக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடமாகும். அக்கன்னியர் மடத்தினுல் நிருவகிக்கப்பட்ட மகளிர் பாடசாலையில் ஜேர்மன் மொழி கற்பிப்பதும், மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைவதற்குத் துணைபுரிந்துவழிகாட்டியாகப் பணியாற்றுவதும் அவளது கடமையாயிருந்தது.

தாராள மனத்துடனும், பொறுமையோடும் ஆர்வத்தது. பெண்ணின் பெருமையைப் பற்றியும், நாட்டுமக்களின் வாழ்வில் பெண்ணுக்குரிய சிறப்பிடத்தையும் அந்தஸ்தைப் பற்றியும் அவள் ஆற்றிய உரைகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் சிறந்த பேச்சாளர் என்ற புகழை அவளுக்குத் தேடிக் கொடுத்தன. அமைதியாக, ஆனல், உறுதியாகவும் ஆணித்தரமாகவும் துணிவோடும் அவள் பேசினுள். இதனல் பெருமைகள் தேடிவந்தன. அவளை பெருமைப்பட்ட தேயில்லை.

இத்தனை வேலைகளுக்கு மத்தி

யூத இனப் படுகொலை நடாத்திய ஹிட்லரின் ஆட்சியில் ஜேர்மனியில் வாழ்ந்த கார்மேல் சபைத்துறவியான யூத மங்கை ஈடித் ஸ்ரெயின் அண்மையிற் பரிசுத்த தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் ஜேர்மனிய விழுத்தின் போது முத்திப்பேறு பெற்ற பட்டம் சூட்டப்பட்டு மகிமைப்படுத்தப்பட்டார். இது ஜேர்மனியில் வாழ்ந்துவரும் யூத சமுகத்தினரிடையே சர்ச்சையை ஏற்படுத்திய சம்பவமாக உலகச் செய்தியில் அடிபட்டது பலருக்கு ஞாபக மிருக்கலாம். இந்தப் புனிதையின் வரலாறு நம்மிற் பலருக்குத் தெரிந்திருக்காது. அதைச் சுருக்கமாக இங்கு தருகிறோம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

1921ஆம் ஆண்டுவரை பேராசிரியர் ஹரலின் உதவியாளராகப் பணியாற்றினாள். மெய்யியல் துறை அவளது அபிலாசைகளுக்கு முழுமையான திருப்தியை அளிக்காது போகவே, அத்துறையில் அவள் அக்கறையுடன் ஈடுபட்டாளில்லை. இக்காலகட்டத்தில், கொட்டிங்ஜன் என்னுமிடத்தில் ஹெட்விக் கொன்ரூட் மாட்டியஸ் என்பவரையும், அவரது கணவரையும் சந்திக்கும் வாய்ப்பு அவளுக்கு ஏற்பட்டது. அச்சந்திப்பின் பயனாக "உண்மை" என்றால் என்ன, "சத்தியம்" என்பதன் பொருளென்ன என்பதைத் தெளிந்து கொண்டாள். அச்சந்திப்பு அவளிடம் மாற்றத்தை (உளமாற்றத்தை) ஏற்படுத்தியது. 1922இல் அவள் கத்தோலிக்கத் திருமறையிற் சேர்ந்து கொள்ளவும் இசைந்து ஏதுவாயிற்று.

பிரூவு ஹெட்விக் கொன்ரூட் குடும்பத்தினர் ஜேர்மனியில் பேர்ச்சாசன் எனுமிடத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வேறிடம் சென்றபோது அவர்கள் இல்லத்திற் சில நாள்கள் தங்கியிருந்தாள் அவ்வீட்டில் இருந்த நூலகத்திற் புனித அவிலா தெரேசாவின் வாழ்க்கை வரலாற்றை வாசித்து 'இதுதான உண்மை" என்பதை உணர்ந்து கொண்டாள். இதைத் தொடர்ந்து ஞான உபதேசப்புத்தகமொன்றையும் திருப்பலிச் செபப் புத்தகமொன்றையும் வாங்கிக் கொண்டாள். அங்கிருந்த கத்தோலிக்க ஆலயத்துக்குச் சென்று, திருப்பலியிலும் பங்கு பற்றத் தொடங்கினாள். அவ்வாலயக் குருவானவரிடம் சென்று, திருமுழுக்குப் பெற்று சத்தியமறையிற் சேர்ந்து கொள்ளத் தனக்கிருந்த ஆவலை எடுத்துரைத்தாள். திருமறை பற்றி அவள் பெற்றிருந்த அறிவைக் கண்டு வியந்த குரு அவளைத் திருமறையிற் சேர்த்துக்கொள்ளச் சம்மதித்தார். 1922ஆம் ஆண்டு புதுவருடத் தினத்தில் ஈடித் திருமுழுக்குப் பெற்றாள். ஹெட்விக் கொன்ரூட் தம்பதிகள் அவளது ஞானப்பெற்றோராகினர். அவளது விருப்பப்படி "தெரேசா" எனப் பெயர் சூட்டப்பட்டு அன்றே தேவநற் கருணையாகிய திருவருட் சாதனத்தையும் பெற்றுக் கொண்டாள்.

ஈடித் துறவு பூணுவதற்கு அடிகளார் ஒப்புதல் அளிக்க வில்லையெனினும் அவளது கல்வியையும் ஆன்மீக வாழ்வையும் வளம் படுத்துவதற்கு ஏதுவாக ஓர் இடத்தை அவர் தேர்ந்து அங்கு அவளை அனுப்பிவைத்தார். ஸ்பேயர் என்னுமிடத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வேறிடம் சென்றபோது அவர்கள் இல்லத்திற் சில நாள்கள் தங்கியிருந்தாள் அவ்வீட்டில் இருந்த நூலகத்திற் புனித அவிலா தெரேசாவின் வாழ்க்கை வரலாற்றை வாசித்து 'இதுதான உண்மை" என்பதை உணர்ந்து கொண்டாள். இதைத் தொடர்ந்து ஞான உபதேசப்புத்தகமொன்றையும் திருப்பலிச் செபப் புத்தகமொன்றையும் வாங்கிக் கொண்டாள். அங்கிருந்த கத்தோலிக்க ஆலயத்துக்குச் சென்று, திருப்பலியிலும் பங்கு பற்றத் தொடங்கினாள். அவ்வாலயக் குருவானவரிடம் சென்று, திருமுழுக்குப் பெற்று சத்தியமறையிற் சேர்ந்து கொள்ளத் தனக்கிருந்த ஆவலை எடுத்துரைத்தாள். திருமறை பற்றி அவள் பெற்றிருந்த அறிவைக் கண்டு வியந்த குரு அவளைத் திருமறையிற் சேர்த்துக்கொள்ளச் சம்மதித்தார். 1922ஆம் ஆண்டு புதுவருடத் தினத்தில் ஈடித் திருமுழுக்குப் பெற்றாள். ஹெட்விக் கொன்ரூட் தம்பதிகள் அவளது ஞானப்பெற்றோராகினர். அவளது விருப்பப்படி "தெரேசா" எனப் பெயர் சூட்டப்பட்டு அன்றே தேவநற் கருணையாகிய திருவருட் சாதனத்தையும் பெற்றுக் கொண்டாள்.

ஈடித் துறவு பூணுவதற்கு அடிகளார் ஒப்புதல் அளிக்க வில்லையெனினும் அவளது கல்வியையும் ஆன்மீக வாழ்வையும் வளம் படுத்துவதற்கு ஏதுவாக ஓர் இடத்தை அவர் தேர்ந்து அங்கு அவளை அனுப்பிவைத்தார். ஸ்பேயர் என்னுமிடம்



பேராலயப் பெருவிழா

ஆசியாவிலேயே மிகப் பிரமாண்டமான ஆலயம் யாழ். பேராலயமாகும். இந்தப் பெரிய ஆலயத்தை நிரப்ப முடியாது எனப் பலரும் பலமுறை முறையிட்டுள்ளனர். ஆனால், யாழ். பேராலயப் பங்குமக்கள் அனைவரும் இங்கு ஒன்றுகூடுவார்களாயின் அவர்களுக்கு இவ் ஆலயம் போதாது என்றே கூறவேண்டும்.

யாழ். பேராலய விழா இம்மாதம் 15ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. பேராலயப் பெருவிழாத் திகதி மாற்றம்பற்றி 23-1-87 பாதுகாவலனிற் செய்தி வெளியிட்டது, வாசகர் அறிந்ததே. கடந்த சில ஆண்டுகளாக இவ்விழா மார்கழி 8ஆம் திகதியே கொண்டாடப்பட்டு வந்தது.

1986 கார்த்திகை 18ஆம் திகதி வெளியான எமது பத்திரிகையில் ''நவநாள்'' என்ற தலைப்பில் மார்கழி 8இல் நடைபெறவிருந்த பேராலய விழாச் சிறப்பினை விமர்சித்ததும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

யாழ். பேராலயம், கொஞ்சேஞ்சிமாதா பேராலயம் என அழைக்கப்பட்டு வந்தது. கொன்செப்ஷன் என்றால் உற்பவம். எனவே, மார்கழி 8இல் வரும் அமல உற்பவ அன்னையின் விழாவே பேராலயப் பெருவிழாவாகக் கொண்டாடப்படவேண்டும் என 1973 ஆம் ஆண்டு திகதி மாற்றம் செய்யப்பட்டது.

மடுத்திருப்பதியின் பெருவிழாவும் ஆவணி 15 ஆம் திகதி கொண்டாடப்பட்டதால், யாழ். மறைவட்ட ஆயர் அங்கு கட்டாயம் இருக்கவேண்டும் என்ற தேவையைக் கருத்திற் கொண்டும் இத்திகதி மாற்றம் அப்போது மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், முற்காலத்திலிருந்தே யாழ். புனித மரியன்னை பேராலயம் ''ஆரோகண மாதா பேராலயம்'' என்றே கச்சேரியிற் பதிவு செய்யப்பட்டுள்ளது. விண்ணேற்பு அன்னை ஆரோகண மாதாவின் விழா ஆவணி 15 ஆம் திகதியாகும்.

பேராலயப் பெருவிழா மீண்டும் ஆவணி 15இல் கொண்டாடப்படவேண்டுமென வேண்டுகோள் விடுத்தவர்கள் பிற காரணங்களையும் முன்வைத்தனர்.

1. மார்கழி மழைக்காலமாதலால் திருநாட் சூழலைப் பாதிக்கின்றது.
2. பாடசாலை இறுதிப்பரீட்சை இந்நாள்களில் வருவதாற் பெற்றோர் பிள்ளைகளுடன் சேர்ந்து குடும்பமாக இவ்விழாவிற் பூரணமாகப் பங்குகொள்ள முடியாதிருக்கிறது.
3. கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு முன் வரும் திருவருகைக் காலத்தில், இவ்விழா இடம்பெறுவதால் ஆடம்பரங்கள் தவிர்க்கப்பட வேண்டியிருக்கிறது.
4. நந்தார், புதுவருடப் பெரும் பண்டிகையும் ஆலய விழாவும் மிக நெருங்கி இருப்பதால் இடைவெளி இல்லாத கொண்டாட்டங்கள் தெவிட்டுதல் நிலைக்குத் தள்ளிவிடுகின்றன.

மாறுக உயிர்ப்பு விழா, ஆலயவிழா, கிறிஸ்து பிறப்பு விழா என மூன்று வேறு காலங்களில் அமையும் போது வழிபாட்டுடன் கொண்டஉறவும் ஆலயத்துடன் கொண்ட தொடர்பும் வலுப்படும்.

இவ்வாண்டு மரியாளின் ஆண்டு. மரியாளின் ஆண்டில் வரும் மரியாளின் விழாக்களெல்லாம் சிறப்பாகக் கொண்டாடப்படவேண்டுமெனத் திருத்தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். புனித மரியன்னை பேராலயமே யாழ். மறைவட்டப் பேராலயமாகவும் இருப்பதால், யாழ். ஆயர், குருக்களுக்கும், மறைவட்டத்திலுள்ள கத்தோலிக்கர் அனைவருக்குமே இவ்விழா முக்கியமானதாகும்.

கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்துக்கு அடுத்ததாக முழு இலங்கையிலுமே அதிகமான கத்தோலிக்கக் குடும்பங்களைப் பங்கு மக்களாகக் கொண்டது யாழ். புனித மரியன்னை பேராலயமாகும். தொகை பெரிதாகினும் பங்களிப்புத் திருப்திகரமானதாக இருக்கின்றதா என்பதனைப் பொறுப்பு வாய்ந்த அனைவருமே சிந்திக்கும் காலமிது.

''நல்லாற்றுல் நாடி அருளாள்க பல்லாற்றுல் தேரினும் அஃதே துணை''

மறைப் பணியிலும் சேவையிலும் குருக்கள் பொதுநிலையினரின் பங்கு

1986ஆம் ஆண்டு வைகாசி மாதம் பெங்களூரில் நடைபெற்ற ஆசிய ஆயர் குழுவின் ''பொதுநிலையினரின் அமைப்பு'' பற்றிய கலந்துரையாடலில் இலங்கையின் பிரதிநிதியாகச் சமுகமளித்த வண. S. J. இம்மானுவேல் அடிகளார் ஆற்றிய தலைமை உரை. தமிழாக்கம்: அருட்சகோதரி இ. பொனவென்சர்

உலகை நோக்கிய கிறிஸ்தவர்களின் செயற்பாடுகள் (ஒழுங்குபடுத்தப்பட்டஅல்லது-ஒழுங்குபடுத்தப்படாத செயற்பாடுகள்) உண்மையாக மீளாய்வு செய்யவும், அவைகளை ஊக்குவித்து உதவத் தயாராக இருக்கவும் வேண்டுமெனக் குருக்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

2ஆம் வத்திக்கான் சங்கத்தின்படி, பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவமானது திருச்சபையின் முழுமையான பணியில் ஒரு பங்கேற்பாக இருக்குமானால், பீடத்தையும் திருவருட் சாதனங்களையும் மேய்ப்புப்பணி வாழ்வையும் சார்ந்த செயற்பாடுகளுக்குள் மட்டும் இதனை எல்லைப்படுத்தி விட முடியாது. இதன் குறுகிய எல்லைகளைக் கடந்து செல்ல வேண்டும். அரசியல், பொருளாதாரம் கலாசாரம் போன்ற வாழ்வின் ஏனைய உண்மைகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

பெற வேண்டியவை. இது திருப்பணி பற்றிய பொதுவான விளக்கம்.

ஆனால், நீண்டகாலமாக வழங்கி வந்த கத்தோலிக்க விளக்கத்தின்படி குருத்துவ திருப்பணியும், அதன் திருநிலைப்படுத்துதலும்தான் உண்மைத் திருப்பணி எனக் கருதப்பட்டு வந்தது. ஆயினும், 2ஆம் வத்திக்கான் சங்கம் இதனைத் தெளிவாக்கியது. இறைமக்களின் இடையறாத வளர்ச்சிக்கும், வளத்திற்குமென பல்வேறு திருப்பணிகளை நம் ஆண்டவர் நிறுவினர் (L G 18a). 6ஆம் சின்னப்பப்பரசர் தமது (''Evangelic Nutiandi'' என்னும் மடலில் திருப்பணிகளைப் பகுத்துணர்வதற்கான பிரமாணங்கள் மட்டில் நமது கவனத்தை ஈர்க்கின்றார். அதாவது, நமது திருச்சபைகளின் ஆரம்பத்தினை நோக்க வேண்டுமென்றும் கேட்கின்றார்.

''திருச்சபையின் தொடக்கப்பணிகளையும் இது உள்ளடக்குகிறது. திருப்பணிபற்றிய பொதுவான கருத்து, அப்போஸ்தலத்துவம் பற்றிய கருத்திற்குள் இடம் பெறுகின்றது. எனவே (ஒவ்வோர் அப்போஸ்தலத்துவமும் ஒரு திருப்பணியாகக் கணிக்கப்படாவிட்டாலும்) ஒவ்வொரு திருப்பணியும் அப்போஸ்தலத்துவத்தில் ஒரு படிவமாக இருக்கின்றது.

திருச்சபையில் சகல திருப்பணிகளினதும் அடிப்படையாக அமைவது அருங்கொடைகள், சேவைகள் என்பன. குழுக்களின் நலனுக்காக அருங்கொடைகள் தனிநபர்களுக்கு அளிக்கப்பட்டுச் சேவைகளாக மலரும் பொழுது, இச்சேவைகள் குறிப்பிட்ட குழுக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு உறுதியாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு அதிகாரத்தையும் பெறுகின்றன. அப்பொழுது அவை உண்மையான திருப்பணிகள் ஆகின்றன. அதாவது, அருங்கொடை

அதிகரித்து வரும் தேவைகள் திருச்சபையின் சேவைகளைக் கேட்டுநிற்கின்றன.

பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் தற்பொழுது பல வடிவங்களை எடுக்கத் தொடங்கியுள்ளது. அவர்கள் கோரும் உதவியைக் குருக்கள் திறம்பட அளிக்க முடியாமலும் இருக்கலாம், எனவே, மேய்ப்பர்களும், குருக்களும் ஒருவகை ஊக்குவிப்பைத் திட்டமிடல் வேண்டும். சிறப்பாக உலகை நோக்கிய அப்போஸ்தலத்துவங்களைப் பொறுத்த மட்டில் இதனைச் செய்ய வேண்டும். இந்த ஊக்குவிப்பு, விண்ணரசின் வருகையைத் தடை செய்யாததாய், கட்டுப்படுத்தாத தாய், மாறுக ஊக்கம் தருவதாய், அதன் வருகையைத் துரிதப்படுத்துவதாய், அமைய வேண்டும்.

நிலையைக் கண்ணுறுதல் அறிவுக்கு ஒளியைக் கொடுப்பதோடு திருச்சபையின் பணி பற்றி, திருச்சபையின் தொடக்க கால அனுபவத்தை நமக்கு அளிக்கிறது. திருச்சபை தன்னைத்தானே உறுதிப்படுத்தவும், வளர்ந்து பரவவும் அந்த அனுபவம் உறுதுணையாயிருந்தால் அது இன்னும் அதிக மதிப்புப் பெறுகின்றது. தொடக்க சூழ்நிலைகளில் மட்டும் கவனம் செலுத்துவதோடு நின்று விடாது மனித குலத்தின் இன்றைய தேவைகள், திருச்சபையின் தேவைகள் ஆகியவற்றின் மேலும் கவனம் செலுத்த வேண்டும். எப்பொழுதும் ஊக்குவிக்கும் இந்த ஊற்றுக்களின் மதிப்பைக் குறைக்காது அவற்றிலிருந்து பயன் பெறுவதும் அதே சமயத்தில் இன்றைய கோரிக்கைகளுக்கும் தேவைகளுக்கும் தன்னைத்தானே அமைத்துக் கொள்வதுமாகிய இவை இரண்டும்தாம் நற்செய்திப் பணியை ஞானத்தோடு தேடவும் கண்டுபிடிக்கவும் உதவக் கூடிய அளவுகோல்களாகும். இந்த நற்செய்திப்பணி திருச்சபைக்குத் தேவைப்படுகின்றது'' (Ev. N. இல. 73)

இப்புதிய கருத்தின்படி திருப்பணி என்பது விரிவாக்கப்பட்ட ஒன்று; திருநிலைப்படுத்தலால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதிகாரம் பெற்ற திருப்பணிகளை மட்டுமல்ல சமூகத்தில் உறுதியான முறையில் இடம் பெறவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சகல பகிரங்கமான மீட்புப்பணிகளையும் அதாவது, அருங்கொடையைப் பெற்ற தனிநபருடைய அப்போஸ்தலத்துவம், திருச்சபையிற் பகிரங்கமான சேவையாற்றுவதற்கு அதன் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்கின்றது எனக் கூறலாம்.

ஆனால், அருங்கொடைகள், சேவைகளைக் கருத்திற் கொள்ளாது திருவருட்சாதன அதிகாரத்தில் மட்டுமே தங்கிய ஒரு திருவருட்சாதனத்தையே மையமாகக் கொண்ட ஒரு 'திருப்பணிஇறையியல்' Theory of ministory திருச்சபையில் வளரத் தொடங்கியது. இதனால், கத்தோலிக்க திருப்பணியின் அர்த்தம் வளம் குன்றியது? திருப்பணியானது திருநிலைப்படுத்தப்பட்டவர்களுக்குள்ளேயே (ஆயர்கள், குருக்கள், திருப்பணியாளர்) எல்லைப்படுத்தப்பட்டு விட்டது.

குரு திருப்பணிகளில் மட்டுமன்று பகிரங்க மீட்புப்பணியிலும் பங்குகொள்ள வேண்டும்.

''திருச்சபைக்குள்ளே பொதுநிலையினரின் ஒரு பொறுப்புள்ள பிரசன்னத்தை மேலும் பலப்படுத்தி, விருத்தி செய்வதும், அந்தப் பிரதேசத்தின் சமூக, அரசியல், கலாசார வாழ்வை ஊடுருவிச் செல்லக் கூடிய கிறிஸ்தவ பிரசன்னத்தையும் ஊக்குவிப்பதும் உங்கள் ஆயர்கள், குருக்களின் அலுவலாக இருக்கிறது. (உம்றிய ஆயர்களுக்கு, 2ஆம் அருள் சின்னப்பர் வழங்கியது. 5-5-86 பக். 4)

திருப்பணி—ஒரு நெருங்கிய ஒத்துழைப்பு (Ministry A closer collaboration) திருநிலைப்படுத்தப்பட்டோரின் திருப்பணியும், பொதுநிலையினரின் திருப்பணியும் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பு நல்க வேண்டியவை; பரஸ்பர பாராட்டைப்

அதிகரித்து வருகின்ற தேவைகள் திருச்சபையின் சேவைகளைக் கேட்டு நிற்கின்றன. ஆனால், குருக்கள் தொகையோ குறைவு. திருவழிபாடு, திருவருட்சாதனம், மேய்ப்புப்பணி சார்ந்த சேவைகளைவிட, இன்று வார்த்தை பற்றிய சேவைகளுக்கும், சமூக—பொருளாதார அபிவிருத்தி சார்ந்த சேவைகளுக்குமான கோரிக்கைகள்தாம் பெருகி வருகின்றன. இதே வேளையில் திருச்சபை சார்ந்த திருப்பணியாற்றும் சக்திகள் குன்றிக் கொண்டு போகின்றன. எனவே, அவைகளுக்குப்பலம் அளிக்கும்படியாகப் பொதுநிலையினரது திருப்பணிகளின் புதிய வடிவங்களை நாம் கண்டு கொள்ளத் துண்டப்படுகின்றோம்.

(அப். பணி. 6: 1—6)

(தொடரும்)

இளைஞர் உலகம்,
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை,
07-08-87

அன்பு இளம் உள்ளங்களுக்கு,



செம்பியன் செல்வனின் 'குறுங்கதைநூறு' நூலிலிருந்து ஒன்று இதோ, தங்கள் தங்கள் பொம்மைகளை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர் சிறுமிகள், திடீரென்று இருவரிடமும் ஒரு போட்டி மனப்பான்மை தோன்றிவிட்டது.

"என்ர பொம்மை தான் வடிவு"

"இல்ல என்ர பொம்மை தான்..."

"ஐய... உன்ர பொம்மைக்குக் காலில்லை..."

"உன்ர பொம்மை ஒரே கறுப்பு... ஊத்தை... உவ்வே..." "ஐய... என்ர பொம்மை கண்ணை மூடித் திறக்கும்" "ஆனை.. சட்டையே பேடேல்லியே... வெட்கம்" என்று ஒரு குழந்தை சொல்ல, மற்றது அழத்தொடங்கியது. அழுகுரல் கேட்டு இருவரின் தாய்மாரும் ஓடிவந்தனர்.

"ஏய்... ரெண்டும் இங்க வாங்க, குளிச்ச கையோட சட்டை கூடப் போடாம... அம்மணமா... விளையாட தெருவுக்கு வந்து சண்டையா போடுகிறீர்கள்?"

இரண்டும் குடுகுடுவென்று தாய்மாரிடம் ஓடின.

ஆனால், நீதி, நியாயம், தியாகம், அன்பு, மனித மாண்பு அனைத்தையும் துறந்து நிர்வாணமாக நிற்கும் ஒரு சில 'பெரியார்களுக்கு' முன்னிருக்கை விரும்பிகளுக்கு, தங்களது உண்மையான நிலைமையை நினைத்து இன்னுமா வெட்கம் வரவில்லை. நெஞ்சிலே ஈரமில்லாமல், இவர்கள் தாங்கள் தப்பி விட்டோம், தங்களது வீட்டிற் செல்வழவில்லை, தங்களது பிள்ளைகள் தான் பூசாவிற்குப் போகாத அதிஷ்டசாலிகள்" என்று சொல்லிக்கொள்வதிலே பெருமிதம் அடைகிறார்கள். இவர்களது சின்னத்தனத்தை என்னென்று வர்ணிப்பது?

எனவே, நன்மை செய்வதையே நோக்காகக் கொண்ட நல் இளம் செல்வங்களே, ஊனமுற்ற மனித மனங்களைக் குணப்படுத்த, ஊமையாகிவிட்ட உண்மைகளைப் பேசச் செய்ய முன் வாருங்கள்.

நல்வாழ்த்துக்களுடன்.
அன்பு நெஞ்சன் வி. பி.

குருசுமுத்தண்ணையின் கிசு கிசு

அடைக்கலம்: இந்தச் சுவாமி இருக்கிற வரைக்கும் இந்தக் கோயிலுக்கு போறேல்ல எண்டு இருக்கிறன் அண்ணை.

குருசுமுத்தண்ணை: அப்ப தம்பி அவருக்காகத் தான் நீயும் திருச்சபையில சேந்தனியே ஏன்தம்பி ஏன்?

அடைக்கலம்: அங்க நடக்கிறதப்பாத்தா ஆத்திரம் தான் வருகுது அண்ணை.

குருசுமுத்தண்ணை: அதுக்காக குளத்தோட கோவிச்சுக் கொண்டு... தப்பி எட்ட நிண்டுபாத்தா எதுவும் நடசகுமாகிட்ட போலு சொல்லி ஆவதல் திருத்தலாம் எல்லே?

துளிர்க்கும் புது அரும்புகள்

பச்சை மரத்திலை தன்மை யிலிருந்து பட்ட மரங்களாக மாற்றப்பட்டு வருகின்றோம். இவ்வாறு மாற்றப்படும்போது எமது சுதந்திரத்தைத்தருமாறு நாம் கோஷமிடுகின்றோம். அது கிடைக்க வேண்டிப் போராடுகின்றோம். ஆனால், ஆன்மவிடுதலைச்சாகஉலகுகிறோமா என்பது கேள்விக்குறி. "நீ இறந்து விடுவாயோ என்று கவலைப்படாதே. இறந்தபின் இறைவனை விட்டுப் பிரிந்து விடுவாயோ என்று கவலைப்படு" என்று ஆசிரியை ஒருவன் கூறி வைத்தான். "வந்தது தெரியும் போவது எங்கே வாசல் நமக்கே தோணாது" என்ற கவியின் எண்ணம் கூற்றும் மூதற் கூற்றது தென்படுகிறது.

இன்றைய வாழ்விலே அகதி வடிவமாகவும், அநாதை உருவம் போலவும் வாழ்கின்ற நாம் மாறுவோம், உலகினை மாற்றுவோம். உடலியலான விடுதலைக்கும் போராடுவோம். தரணிக்குத் தம்முயிரை ஈந்து வாழும் கிறிஸ்துவின் அடிச் சுவடுகளான இளஞ்சந்ததிக்காகவும், இறைவனை வேண்டுவோம். ஏனெனில், இயேசுவின் விண்ணகவீட்டினில் விருந்தினராகும்போது, சோதனையையும் வேதனையையும் வென்று புதுச் சாதனை நிலைநாட்ட வேண்டும்.

டேவிற் இம்மனுவல் ரட்ணராஜா
செண் ஜேம்ஸ்,
இளவாலை

நாட்டின் இரு கண்கள் இளைஞர்கள்

போர்க்களத்திற்குச் செல்லும் இளைஞன் தன் படைத் தலைவர்களுக்கு அமையவேண்டும். வேலைத் தலத்திற்குச் செல்பவர்கள் அங்குள்ள நிர்வாகிக்கு அமைந்தொழுக வேண்டும். பேரவைக்குச் செல்பவர், அவைத்தலைவர்களுக்குப் பணிந்தொழுக வேண்டும். இளைஞர்களும் யுவதிகளும் தாம் பணிபுரியும் இடத்திற் பணிந்தொழுகக் கற்றுக் கொள்ளவேண்டும்.


ஒருநாட்டின் பொருளாதார வளர்ச்சி அந்நாட்டின் தொழில் முறைகளிற் தங்கியுள்ளது. ஒரேதுறையிற் பயிற்சி பெறுமற் பல்வேறு துறையிலும் பயிற்சி பெற்றால் ஒருநாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யக் கல்வி உதவும்.

இளைஞர் யுவதிகளைப் பொறுத்தவரையில், ஒருநாட்டின் பாதுகாப்பு அவர்களின் கரங்களிலே தங்கியுள்ளது. நாட்டில் நெருக்கடி நிலை தலை தூக்கும்போது, நாடு பகைவர்களின் பயமுறுத்தல்களுக்கு உள்ளாகும் போது, நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்குச் சிறந்த படை அமைப்புத் தேவை. இங்கு விளையாட்டுத் துறையிற் சிறந்துவிளங்கிய இளைஞர்களின் சக்தி நன்கு பயன்படுத்தப்படலாம். விவசாயத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது இளைஞர்களின் சக்திக்கு முக்கியத்துவம் இருக்கின்றது.

இருகை சேர்ந்து ஒலியுண்டாவதுபோல், ஆணும் பெண்ணும் இணைந்து தமதுபங்கை நாட்டு நலனுக்கு அளிக்கும் போது, அந்நாடு தாழ்வுற்ற நிலையிற் காட்சியளிக்க முடியாது. ஒருபெண்ணின் நிலை பல்வகைப்பட்டது. இல்லத் தலைவியாக, மதி உரைக்கும் மந்திரியாக, பாலூட்டிவளர்க்கும் அன்னையாக, அறிவூட்டி வளர்க்கும் ஆசானாக, நல்லுரை வழங்கும் சற்குருவாக, அகழ்வாரைத் தாங்கும் நிலம் போன்று, பொறுமை பூண்ட சுமைதாங்கியாக இப்படிப் பல்வகையிற் பணிபுரியும் பாக்கியமும் பெண்ணிற்குச் சிறப்புத் தருகின்றது.

மேற்கூறியவைகளில் இருந்து ஒருநாட்டின் இருகண்கள் இளைஞர் யுவதிகள் ஆவர். ஒருகண் பழுதடைந்தாலும், பார்வையில் ஒளி குன்றுவதுபோல் இவ் இருபகுதியினரில் ஒருபகுதியினரின் சக்தி குறைந்தாலும், அதனால் நாட்டிற்குப் பேரிழப்பே உண்டாகும். ஆகவே, இளைஞர் யுவதிகளாகிய நாம் 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்ற மூதுரைக் கேற்ப, எம்மைச் சீர்சிறப்புடன் வளர்க்கும் பெற்றோருக்கு மட்டுமன்றி, அறிவை அள்ளித்தந்து உத்தமராக்கும், ஆசிரியருக்கும் பேரும் புகழும் பெற்றுத் தருவோம்.

எம். ஜெரோட், எழுவைதீவு.



"குடும்ப வாழ்வில் எழும் இந்த குறிப்பிட்ட சிக்கலை அலசி ஆராயுங்கள். இந்தப் பிரச்சினையைப்பற்றி எழுதுங்கள்"—என்று பலரும் பல்வேறுபட்ட குடும்பப் பிரச்சினைகள் பற்றிச் சொல்கிறார்கள். பிரச்சினைகளின் மத்தியில் இருக்கும் நீங்களே பிரச்சினைகளை எழுதுங்கள். உரிய முறையிற் பிரசுரிப்போம். உங்கள் பெயர்களைத் தரத் தயங்கினால் புனை பெயர்களைப் போடுங்கள். ஆனால் உங்கள் விலாசங்களைத் தெளிவாகத் தாருங்கள்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

சில பெற்றோருக்குத் தம் பிள்ளைகள் மீதே நம்பிக்கையில்லை. சமூகத்துடன் சேர்ந்து வாழும் பிள்ளை நெறிதவறி (கெட்டு) விடுமோ என்று அஞ்சித்தம் பிள்ளையைக் கட்டுப்படுத்தி, அவனைச் சுதந்திரமாகத் திரியவிடாது தமது கைக்குள்ளேயே கைப்பாவை போல் வைத்து அவனது வாழ்வையே குட்டிச் சுவராக்கிவிடுகின்றனர். இது முற்றிலும் தவருன செயலாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்த பிள்ளைகளே பெருமளவு நெறிதவறிப் போகின்றனர்.

உண்மையில் பிள்ளைகளைச் சுதந்திரமாக வாழ விட வேண்டும். அவர்கள் சுதந்திரத்தை ஒருபோதும் பறிக்கக் கூடாது. தமது பிள்ளைகள் மீது பெற்றோருக்கு எப்போதும் நம்பிக்கை இருக்க வேண்டும். அப்போது பிள்ளைகளும் பெற்றோரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான முறையில், தமது சுதந்திரத்தை நல்ல முறையிற் பயன்படுத்திக்கொள்வர். இதே வேளை பிள்ளைகளும் சுதந்திரம் என்று சொல்லிக் கொண்டு தவருன வழியிற் சென்று அழிவைத் தேடிக் கொள்ளாது மிகவும் விழிப்போடு இருக்க வேண்டும். தற்காலப் பிள்ளைகளின் வாழ்க்கைமுறைகளும் மாறிக் கொண்டே வருகின்றன. இது பல பெற்றோருக்குப் பிடிப்பதில்லை. இப்படியான சூழ்நிலை பல குடும்பப் பிரச்சினைகள் உருவாவதற்கும் ஒரு காரணமாகும். இந்த விடயத்தில், பெற்றோர் சிறிது பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, மாறிவரும் காலங்களைப் பெற்றோர் உணர்ந்து, தமது எண்ணங்களிற் சில மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதே வேளையிற் பிள்ளைகளும் அனுபவ முதிர்ச்சியடைந்த தம் பெற்றோரின் பேச்சுக்கு மதிப்பளித்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

பிள்ளை வளர்ப்பிற் பெற்றோரின் பொறுப்பு மிக முக்கியமானது. தற்கால சூழ்நிலையிற் பிள்ளைகளை வளர்ப்பது மிகவும் கஷ்டம். தவறு செய்யும் பிள்ளைகளைக் கண்டித்துத் திருத்துவதென்பது முடியாத காரியம் என்று பெற்றோர் பலர் குறைப்பட்டுக் கொள்வதுண்டு. பெற்றோர் சிலர் தம் பிள்ளைகள் தவறு செய்யும் போது அவர்களைக் கண்டித்துத் திருத்துகின்றனர். இன்னும் சிலர் "எக்கேடு கெட்டால் எனக்கென்ன? ஏதோ தன் எண்ணப்படி வாழட்டும்" என்று அவர்களை அப்படியே விட்டுவிடுகின்றனர். இது தவருனதாகும். தவறு செய்யும் பிள்ளையைக் கண்டித்துத் திருத்துவது பெற்றோரின் கடமை.

பிள்ளைகள் சிலர் தாம் தவறு செய்யுமிடத்துத் தம் பெற்றோர் தம்மைக் கண்டித்துத் திருத்தி வளர்ப்பதை விரும்புகின்றனர். இன்னும் சிலர் தாம் எப்படி நடந்தாலும் தம்மைப்பற்றி எதுவுமே கதைக்கக்கூடாது என்று எதிர்பார்க்கின்றனர்.

தம் பிள்ளைகளைச் சீரியமுறையில் வளர்க்க விரும்பும் பெற்றோர், தவறு செய்யும் பிள்ளையைக் கண்டித்துத் திருத்த நேரிடும் போது, பிள்ளைகள் பெற்றோரை வெறுக்கக் கூடாது. பெற்றோர் தமது பிள்ளைகள் மீது அளவற்ற அன்பும் கரிசனையும் அக்கறையும் உள்ளவர்களாதலால் தவறு செய்யும் போது எம்மைக் கண்டித்துத் திருத்தி எம்மீது அன்பைப் பொழிகின்றனர். "அடிக்கிற கை தான் அணைக்கும்". அன்பு உள்ள இடத்தில் தான் கண்டித்தலும் திருத்தலும் நிச்சயமாக இருக்கும். யார் மீது அன்பு கொண்டிருக்கிறார்களோ அவர்களைத் தான் உண்மையிற் கண்டித்துத் திருத்துகின்றனர். பிள்ளைகளின் எதிர்கால வாழ்வில் அக்கறை கொண்டவர்கள் தாம், தம் பிள்ளைகளைக் கண்டித்துத் திருத்துவர். தவறு செய்யும் சமயங்களிற் கடிந்து கொள்வர். துணிவோடும், நேர்மையோடும், நீதியோடும் தம் பிள்ளைகளைத் திருத்தும் பெற்றோரைப் பெற்றோர் உண்மையிற் கொடுத்து வைத்தவர்கள். இந்த உணர்வு எப்போதும் எம் மனத்தில் இருக்க வேண்டும். அப்போது தான் பெற்றோர் கண்டித்துத் திருத்தும் போது, எமக்கு அவர்கள் மீது வெறுப்போ, ஆத்திரமோ, பழிவாங்கும் எண்ணமோ நிச்சயமாக ஏற்படாது. அவர்கள் மீது அளவு கடந்த அன்புதான் ஏற்படும்.

செல்வி பற்றிமாரேஸ் அந்தோனிப்பிள்ளை



யோசுவா ஆகமம்

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இலம், யாழ்ப்பாணம்.

இஸ்ராயேலரை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு கொண்டு போய்ச் சேர்க்கும் யோசுவா பற்றியது இந்நூல். வாக்குறுதியின் நிறைவை எடுத்தியம்பும் இந்நூலை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. உடன்படிக்கையின் இறைவன் (1: 1—12; 24) வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தில் பல இன மக்கள் வாழ்ந்துகொண்டிருந்தனர். இஸ்ராயேல் மக்கள் அவர்களுடன் போரிட்டு அந்நாட்டைக் கைப்பற்ற வேண்டியதாயிற்று. இஸ்ராயேலர் இறைவனின் கட்டளைகளுக்கு எதிராக நடந்த போது, போரில் இறைவன் அவர்கட்கு தோல்விகளையும் அளிக்கின்றார். வீழ்ச்சிகளுக்கும் தோல்விகளுக்குமிடையே கானான் தேசத்தை வென்றனர்.

2. நாட்டைப் பகிர்தல் (13: 1—21: 45) கானான் தேசத்தை உடைமையாக்கியதும் யோசுவா தலைமையில் நாட்டைப் பல பாகங்களாகப் பிரித்துத் தம்மிடையே பகிர்ந்துகொண்டு வாழத் தொடங்கினர்.

3. பிரியாவிடை அறிவுரை (23: 1—26) யோசுவா தம் பணிமுடிவில், சிக்கேமில் இஸ்ராயேலரின் மூப்பர்கள் குடும்பத் தலைவர்கள், நீதிபதிகள் யாவரையும் அழைத்து இறைவன் உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறார். அவர்கள் வேறு தெய்வங்களை வழிபடாது என்றுமே ஒரே இறைவனுக்குப் பிரமாணிக்கமாகவும், அவரிலே பற்றுறுதி கொண்டு வாழவும் வேண்டுமென்று அறிவுரை கூறுகிறார்.

சகோ. மனுவேற்பிள்ளை டேவிற்



வணக்கம் மருமக்களே!

மொழிக் குழப்பத்தினால் பாதுகாப்பு அரண் கட்ட முடியாமல் மக்கள் பிரிந்து போனார்கள் என்று சொன்னேன் இல்லையா? ஆனாலும், நம் நோவாத் தாத்தாவின் நல்ல பிள்ளைகளில் மூத்தவன் ''சேம்'' எப்பொழுதும் நல்லபடி வாழ்ந்தான். இறைவனின் அன்புக்குக் கட்டுப்பட்டு அவனும் - அவனது தலைமுறையும் வாழ்ந்தது. எனவே, ஆண்டவன் இந்தக் குடும்பத்தை ஆசீர்வதித்து, தனது திட்டம், தான் படைத்த நோக்கம், தனது மகிமை உலகம் உள்ளவரை நிலைவு கூரப்பட வேண்டும் என விரும்பி அவனது சந்ததியை ஆசீர்வதித்தார்.

அவனது வம்சத்தை இவ்வுலகில் நீடுழி காலம் வாழ அனுமதித்தார். அவனது வம்சத்தில் உதித்த ஒரு மகாத்மா 'தாரே' எனப்படுவர்.

இந்த ''தாரே'' என்பவருக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் ஆபிரகாம், நாக்கோர், ஆரான் என்பவர்கள்.

இந்த ஆபிரகாம் இருக்கிறாரே, இவர் மட்டில் நம் இறைவனுக்கு நிரம்பவும் விருப்பம். இவர் சாமானியமான ஆளல்லர். பெரிய ''ஜமீன்''. நிறையச் சொத்துக்கள், மந்தைகள், நிலபுலன்கள் என்று எக்கச்சக்கமாக இருந்தன. இவ்வளவு இருந்தும் நம் நாட்டிலே வாழுகின்ற, பதுக்கற் பேர்வழிகள் போல இல்லாது - அயலார் மட்டில் அன்பும், கண்ணியமும் கொண்டுள்ள மகாத்மாவாகத் திகழ்கிறார்.

இப்படிப்பட்ட பெரிய புள்ளியை இறைவன் பார்க்கிறார். ''இவரைச் சும்மா விடக் கூடாது. நம் திட்டத்துக்கு ஏற்ற ஆள் இவர்தான். இவர் மூலம் உலகம் உள்ளவரை நினைவு கூரக் கூடிய ஒரு பெரிய திட்டத்தை உருவாக்குவோம்'' என்று 'பிளான்' பண்ணினார்.

ஆண்டவன் எங்களைப் போற் சும்மா பார்த்துக் கணக்குப் போடுபவர் அல்லர். 'எக்ஸ்ரே' எடுப்பது போல ஊடுருவிப் பார்த்துக் கணக்குப் போடுபவர். அதென்ன கணக்கு?

சொல்லத்தானே போகிறேன்,
ஒரே ஒரு வாரம்.

அன்புடன்
பைபிள் மாமா

அறிந்துகொள்ளுங்கள் — 21

ஆபிரகாமின் உடன்படிக்கை

இன்று உடன்படிக்கை செய்வோர் ஒரு காகிதத்திற் சில வரிகளை எழுதி, உடன்படிக்கை செய்வோரும், வேறு சாட்சிகளும் கையெழுத்திடுவர். உடன்படிக்கைப் பத்திரம் பதிவாகிவிடும். மொசபடோமியாவிலும் இப்படிப் பத்திரத்தில் உடன்படிக்கை செய்தனர். அப்படியான பத்திரங்கள் இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், இஸ்ராயேல் இனம் நாடோடி இனம். நாடோடி இனத்தவர் பத்திரத்திற் பதிவு செய்வதும். பத்திரப்படுத்துவதும் அறியார். அவர்கள் சடங்குமுறை வழியாக உடன்படிக்கை செய்தனர். மிருகத்தின் உடலை இரு கூருக்கி, எதிரெதிராக வைத்து, அதற்கு இடையில் உடன் படிக்கை செய்யும் இருவரும் நடந்து செல்வர். செல்லும் பொழுது பலவாக் குறுதிகளைக்கூறுபவர். மீறினால், அம்மிருசத்தைப்போல் இரண்டாக வெட்டப்படுவர் என்பதே அச்சடங்கின் பொருள்.

இதன்படி, இறைவனும் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்கிறார். மூன்று வயது கிடாரி, ஆட்டுக்கடா, வெள்ளாடு இவற்றை நடுவே வெட்டித்துண்டங்களை எதிரெதிராக வைத்து, பறவைகள் வராமல் துரத்திக் கொண்டிருந்தார். சூரியன் மறையும் வேளையில், ஆபிரகாமுக்கு அயர்ந்த தூக்கம் உண்டானது. இது ஏவாளைப் படைக்கும்போது ஆதாமுக்கு ஏற்பட்ட தூக்கம் போன்ற மறைபொருள் மிக்க தூக்கம். இத்தூக்கத்தில் மறை பொருளுடைய ஆன்மீக போராட்டத்தில், தனது சந்ததியினருக்கு வரவிருக்கின்ற துன்பங்களைப்பற்றியும் ஆபிரகாம் தனது மரணம் பற்றியும் இறைவனால் முன்னுணர்வு பெறுகின்றார்.

இங்கு, இறைவன் மட்டும் துண்டங்களுக்கு நடுவே சென்றார். இறைவன மனிதனோடு உடன்படிக்கை செய்யமாட்டார் என்பதே இதன் பொருள். எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் போர்கள் நிகழ்ந்தே வந்துள்ளன

மேலும், அரூபியான இறைவன் எப்படி நேரில் தோன்றக் கூடும். எனவே தான், இறைவனின் பிரசன்னத்தைக் காட்டும் நெருப்பு, புகை, மேகம் போன்ற புற அடையாளங்கள் மூலம் தோன்றுகிறார். இவ்வுடன்படிக்கை, இஸ்ராயேல் மக்களுக்குக் காட்டிய தனிச்சலுகை. எனவேதான், இவ்வுடன்படிக்கையின் அடையாளம் ஆபிரகாமிலும், அவர் வழித்தோன்றல்களிலும் தங்க வேண்டி, விருத்தசேதனம் செய்யப்பட்டது.

இ. ம. ஜெயசிலன்



உங்கள் தொடர்பு எம்முடன்.

காவலன் கண்மணிகள்
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
மடல் 26. த. பெ. எண் 2,
யாழ்ப்பாணம்.

என இருக்க வேண்டும்.

அங்கத்துவ விண்ணப்பம்:

★ 6ஆம் ஆண்டு தொடக்கம் 11ஆம் ஆண்டு வரை கல்வி கற்கும் கண்மணிகள் இவ்விண்ணப்பப் படிவத்தை பிரதி செய்து, நிரப்பி, மேலுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

★ உங்கள் பெயரும் அங்கத்துவ எண்ணும் இங்கு பிரசுரமாகும்.

1) உங்கள் பெயர்: செல்வன்/செல்வி.....
2) கற்கும் ஆண்டு: .....
3) கற்கும் பாடசாலை.....
4) விரும்பி வாசிக்கும் தினப்பத்திரிகைகள், வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகள்:.....
5) காவலன் கண்மணிகளில் நீர் எதிர்பார்க்கும் அம்சங்கள்:...
6) கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள் போன்ற துறைகளில் உமக்கு ஈடுபாடுள்ள துறை:.....
7) நான் 'காவலன் கண்மணிகள்' அங்கத்துவத்தில் மகிழ்ச்சியடைகிறேன்.
கையொப்பம்.....
8) என் கண்மணியைக் 'காவலன்' கண்மணிகள் ஆக காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.
அப்பா, அம்மா, பாதுகாவலர் கையொப்பம்.....

கணிதம்: படிமுறை 1 இன் தொடர்ச்சி

எண்	வாசிக்கும்முறை	பத்தின்வலு
1	ஒன்று	10^0
10	பத்து	10^1
100	நூறு	10^2
1 000	ஆயிரம்	10^3
10 000	பதாயிரம்	10^4
100 000	நூராயிரம்	10^5

எண்களை எழுதும்போது மூன்று இலக்கங்களாகச் சேர்த்தும், சிறிது இடைவெளி இட்டபட்டும் எழுதும் முறையைக் கவனிக்கவும். காற்புள்ளி (கமா) இடுவதைத் தவிர்க்கவும். சென்றபடி முறை 1இல் ஏற்பட்ட தவறைத் திருத்தவும்.

அடுத்து வருவது உரோம இலக்கங்கள்
படியுங்கள், நண்பர்களைப் படிக்க வையுங்கள்.

போரின் கெடுதியும் சமாதானத்தின் தேவையும்

''ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவ தன்றிவ் வையக் தியற்கை''

என்பது பழந்தமிழ் நூலாகிய புறநானூற்றில் வரும் கூற்றாகும். ஒருவனை மற்றவன் கொல்லுவதும் ஒருவனுக்கு மற்றவனை தோற்பதும் உலக இயற்கையாகும் என்பதே இதன் பொருள். எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் போர்கள் நிகழ்ந்தே வந்துள்ளன

''வலியது வாழும்'' என்ற விஞ்ஞான உண்மையின்படி, வலிமையால் மிகுந்தவர்கள் பலவீனர்களை அழிப்பதன மூலம் தமதுடைய நலன்களைக் காத்துக்கொள்கின்றனர். ஆக்கத்தையும் அதிகாரத்தையும் மேலோங்கச் செய்கின்றனர். ஆனால், ஒரு சிலரின் நலனகளுக்காகப் பலர் அழியத்தான் வேண்டுமா.

ஒருவருக்கு உயிரை வழங்கி அவரை வாழவைக்க முடியாத எமக்கு அவரின் உயிரை வாங்கவும் உரிமை இல்லை. நாம் அனைவரும் இறைவனின் குழந்தைகள் அவ்வாறுயின் ஒரு குழந்தை, தன் சகோதரனுகிய மற்றொரு குழந்தையின் உயிரை வாங்க முற்படுதல் பெரும்பாவம் அல்லவா? சுயநலத்தால் விழிகள் குருடானவர் இதனைச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஆயுதபலம், படைப்பலம், செல்வபலம் என்பவற்றைக் கொண்டு போராடி இரத்தத்தை வெள்ளமாக ஒட்டித் தமது விருப்பங்களை இத்தகையவர் முடித்துக் கொள்வது பெருங் கொடுமையாகும்.

'அறிவு அழிவினின்றும் காக்கும் கருவி' என்றார் திருவள்ளுவர். அவரின் பொன் மொழியினைப் போற்றி உலகில் சாந்தியும், சமாதானமும் நிலவவும், போரே அற்ற நிலை உருவாகவும், பாடுபட வேண்டியது பொறுப்பு வாய்ந்த ஒவ்வொருவரதும் கடமையாகும்.

வணக்கம்.

எழுதியவர்: பாஸ்கர், யாழ்ப்பாணம்.

இருமனம்

புதிதாக வாங்கிக் குடியேறிய வீட்டின் ஒழுங்குகளை ஒருவாறு சீர்ப்படுத்தி முடித்துக் கொண்ட வனிதா, அன்று பிற் பகல் அடுத்த வீட்டையும் ஒரு முறை எட்டிப்பார்த்தாள்.

யார் யாரோ? எப்படிப்பட்டவர்களோ? என்று அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் அவளிடம் தலைகாட்டியது.

"காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது போல" அவள் கண்ணெதிரில் தென்பட்டாள் ஒருத்தி.

நெற்றியிற் குங்குமம், சிருண்ட கூந்தல், நல்லநிறம், அரும்பண்புகள் நிறைந்தவளென்பதை வெளிக் காட்டும் சாந்தமான முகபாவம். ஒரு தடவை பார்த்ததுமே சிலரிடம் நம்மனம் ஈர்க்கப் படுவதில்லையா? அந்த வரிசையில் வனிதாவைக் கணப் பொழுதிற் கவர்ந்து விட்டாள் அந்தப் பெண்.

அடுத்தமாதமே அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டாள்.

அண்டை அயலவர்கள் கூட இவர்களது நெருங்கிய நட்புறவைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். பலர் நெஞ்சம் புகைந்து பொறுமையுங் கொண்டனர்.

மூன்றுவடங்களின் பின், சவுதியிலிருந்து, வனிதாவின் மகன் வீட்டுக்கு வந்திருந்தான். ஏலவே திட்டமிட்டிருந்தபடி, அவனது திருமண ஏற்பாடுகள் மிகத் துரிதமாக நடை பெற்றன.

பெண் வீட்டார், உறவினர்கள், நாளுக்கு நாள் வனிதாவின் வீட்டுக்கு வந்துபோய்க் கொண்டிருந்தனர். இந்த ஆரவாரங்களின் மத்தியில், தினமும் பல தடவைகள் அருந்ததியின் வீட்டுக்கு வந்து போகும் வனிதா, வருகையைத் திடீரென நிறுத்திக் கொண்டாள். வனிதா உறவு இப்படிச் செய



முகமலர்ச்சியோடு சில வார்த்தைகளில் தன்னை அறிமுகஞ் செய்து கொண்டதோடு, அவளைப்பற்றியும் வனிதா கொஞ்சம் அறிந்து கொண்டாள்.

அவள் பெயர் அருந்ததி. தோற்றம் மட்டுமன்றி பேச்சும், சிரிப்புங் கூட வனிதாவுக்கு நன்கு பிடித்து விட்டன.

நாளடைவில், மனங்கலந்து, உரையாடி, உறவாடி இருவர் நட்பும், இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும் அன்பாய் நிலைத்து விட்டது.

வனிதா சட்டத்தரணியின் மனைவி. வளமான வாழ்க்கைத் தரம் படைத்தவள். அருந்ததி சாதாரண குடும்பத்தவள், அவள் கணவன் ஆசிரியன். அப்படியிருந்தும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அவர்கள் அன்புக்குத் தடையாயிருக்கவில்லை.

ஒருமுறை, தன் மகனை வெளி நாட்டுக்கு அனுப்பவேண்டிய சந்தர்ப்பத்தில் மிக்க அவசியமாக ஒரு தொகை பணத்தை அருந்ததியிடம் கைமாற்றுகப் பெற்றாள் வனிதா 'மயிர் ஊடாடாத நட்புப் பொருள் ஊடாடக் கெடும்' என்பதை உணர்ந்து,

லற்று நின்றுவிட்டதைப் பற்றி அருந்ததி எள்ளளவும் வருந்தவில்லை. திருமண வேலை அவசரங்களுக்கு மத்தியில், தானும் வரம்பு மீறி நடந்து வனிதாவுக்குத் தெந்தரவு கொடுக்காமல் இருந்துவிட்டாள்.

திருமணம், வெகு விமரிசையாக நடந்து முடிந்தது. ஆனால், அந்ததிக்கு அழைப்பிதழ் கூட அனுப்பவில்லை வனிதா.

உடலை எரிக்கும் நெருப்பிலும், மூச்சையடைக்கும் புகை கொடியதல்லவா? வனிதா தனக்கு அழைப்பு அனுப்பாத காரணத்தை அறிவதற்குத் துடியாகத் துடித்தாள் அருந்ததி.

'ஊர்வாயை மூட உலை மூடியுண்டா?' காற்றிலே மிதந்து வந்த கதை அருந்ததியின் காதிலும் எட்டிவிட்டது.

அருந்ததி சாதி குறைந்த வளாம்

"இருட்டறையில் உள்ளதடா
உலகம் — சாதி
இருக்கின்ற தென்பவனும்
இருக்கின்றானே."

— பாண்டியன் பரி.

வாழ்வுதரும் இறைவாக்கு

பாழடைந்த நகரத்துக்கு
ஆறுதல் தருவார்;
அக்களிப்பும் மகிழ்ச்சியும்
எப்பக்கமும் காணப்படும்,
நன்றியறிதல் பாடலும்
புகழொலியும் கேட்கப்படும்.

இசை. 51: 13

இறைவாக்கு வாழ்வுதரும்



ஆகஸ்டு - 4

புனித மரிய வியான்னி அருளப்பர்.

கூரே - தே - ஆர்ஸ் என்று அழைக்கப்படும் வியான்னி அருளப்பர் பிரான்ஸ் நாட்டில் நெப்போலியன் காலத்தில் பக்தியுள்ள பெற்றோரின் மகனாகப் பிறந்தவர். இவர் குருவாக வேண்டுமென்று மிகவும் விரும்பிக் குருமடத்திற சேர்ந்தார் ஆனால், பாடங்கள் படிப்பதற்கு மிகவும் கடினமாகத் தோன்றின. ஒரளவுக்கு மாத்திரமே கற்றுத் தேர்ந்தார். குருப்பட்டம் பெற்றபின் ஆர்ஸ் நகருக்கு பங்குக் குருவாக நியமனம் பெற்றார். அங்கு சிறந்த குருவாகப் பணியாற்றித் தம் பணியைத் திறம்பட நிறைவேற்றினார். இவர் 1859 ஆம் ஆண்டு தமது 73வது வயதில் விண்ணகம் சென்றார்.

ஆகஸ்டு-5

புனித கன்னிமரியாயின் ஆலய அபிஷேகம் (பனிமய மாதா திருநாள்)

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் பத்ரீசியன் குலத்தைச் சேர்ந்தவரும் பக்தி உள்ளவருமான ஜோண் என்பவர் தன் திருமணத்திற்குப் பின் வெகு நாள்களாகக் குழந்தை இன்றி இருந்தார். தன்னிடமிருந்த ஏராளமான பொருள்களை ஒரு நல்ல காரியத்திற்குச் செலவிட விரும்பினார்.

பாப்புவின் உத்தரவோடு தனது சொந்தச் செலவில் ஓர் ஆலயத்தைக் கட்டிமுடித்தார். இன்றுவரை அங்கே பல புதுமைகள் நடந்துவருகின்றன. பாப்பரசர் 3ஆம் சிக்ஸ்துஸ் காலத்தில் எழுப்பப்பட்ட இப் பேராலயம் தான் கன்னிமரியின் புகழுக்காகவும் அவளின் பெயரைக் குறித்து எழுந்த ஆலயங்களிலெல்லாம் முதன் முதலாகத் தோன்றியது.

ஆகஸ்டு 6.

ஆண்டவரின் உருமாற்ற விழா

ஆகஸ்டு - 7

புனித கயத்தான் (குரு)

இவர் இளமையிலேயே தமது பெற்றோரால் தேவதாயாருக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டார், தன்னுடைய படிப்பை முடித்தபின் உரோமைக்குச் சென்று குருப்பட்டம் பெற்றார். ஜெர்மனியில் உரோமையைக் கொள்ளையடித்த போது இவரது மடத்தை கொடூரமாய்த் துன்புறுத்தினர். இவரது தூய மறையுரைகளாற் பல பாவிகள் மனம் திரும்பினர்

முதலாமிடம்

யாழ்.புனித மரியன்னை பேராலயப் பீடப் பரிசாரகர்கள், இவ்வாரம் 500 பாதுகாவலன் பிரதிகளை விற்பனை செய்த தால் யாழ். ஆசனக் கோவில் பத்திரிகை வினியோகம் 650 ஆக உயர்ந்துள்ளது. நன்றி பாராட்டுக்கள். இவ்வாரம் 4,325 பிரதிகள் அச்சிட்டு விற்பனையாகின்றன. பிற இடங்களிலும் பங்குரீதியாகப் பாதுகாவலன் வாசகர்களை ஊக்குவியுங்கள். — ஆர்.



(5)

அறுவடை அதிகம் வேலை
ஆள்களோ மிகவும் சொற்பம்
அறுப்பவர் கூட வேண்டி
ஆவன செய்தல் தாடி
திறமுடை திட்ட மொன்றைத்
தீட்டினார் அந்த நாளில்
பெறும்படி இலத்தீன் கல்வி
பிரியமுள் இளைஞர் வந்தே

அன்றவர் தொடக்கி வைத்த
அத்தகை கல்வியாலே
சென்றதிற் கற்ற பேரிற்
சிறந்தவர் இருவர் பின்னுள்
குன்றத்தில் இட்ட தீபக்
குருக்களாய் ஈழம் வந்து
குன்றிடாச் சேவை செய்தார்
குரு இவர் பணியின் கனியாய்.

இப்பணி தொடர்ந்த வேளை
இலங்கையின் தூறைமுகத்திற்
கப்பலில் வந்து சென்ற
கடவுளின் தொண்டர் மூலம்
துப்பது கிடைத்த திங்கு
துன்புறும் மக்கள் பற்றி
அப்பொழு துடனே தானே
அவருளம் துடித்த தம்மா

ஒல்லாந்து ஆட்சியாளர்
ஒழுகிடும் தமது வேதம்
அல்லாத கத்தோலிக்கம்
அழித்திடும் நோக்கத்தோடு
பொல்லாத எதிரியான
போத்துக்கல் வேதம் என்று
இல்லாத கொடுமை எல்லாம்
இயற்றுதல் கேள்வியுற்றார்

"துன்புறும் இந்த மக்கள்
துயரினைத் துடைத்தல் வேண்டும்
அன்பினைத் தேடி ஏங்கும்
அபலைகளான ஈழ
அன்பர்கள் தம்மைத் தேற்ற
ஆகிடும் வழிதானென்ன
என்வகை செயவேன்" என்று
ஏங்கினர், செபித்தார் நின்று

அந்திய நாட்டோரான
அறுதியாய்த் துறவு பூண்ட
சந்நியாசிகள் மட்டே
சங்கடம் உள்ள பங்காம்
இந்நிலை யான நாட்டில்
இயற்றுவர் பணியை என்ற
இந்நியா யத்தா லன்றோ
இயன்றிடா நிலையி லானார்.

என்னதான் ஆன போதும்
இவங்கையில் உள்ள பேர்க்காய்
தன்னந்த னிய னேனும்
தாண்டியே சென்று ஆழி
உன்னத தேவன் தொண்டை
உதவுவன் என்று கூறித்
தன்னுள ஆசை தன்னைத்
தலைவர்கள் தமக்குச் சொன்னார்

"கோவையில் ஆண்டு ஐந்தாய்க்
கூடிய பணிகள் செய்தேன்
தேவைஇப் பொழுதோ ஈழத்
திருச்சபைக் கதலால் அங்கே
சாவையே நோக்கி வாழும்
சத்திய வேதத் தோர்க்குச்
சேவையே செய்யச் செல்வேன்
செப்பிடும் விடையை" என்றார்

இன்னலை நாடிச் சென்று
இயற்றிடும் தொண்டு ஆசை
அன்னவர்க் குளது கண்டு
அதிசயித்தார்கள் பின்னர்
"கன்னடம் கூட இன்று
கவலையின் நிலையில் அன்றே
நின்னரும் பணிய அங்கு
நிகழ்த்" தென ஆணையிட்டார்

(தொடரும்)

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி நூலகம்

கலைமகள்

ஆண்டின் 19ஆம் ஞாயிறு
அமைதியான தென்றல்

1 அரசர், 19: 9a, 11—13a உரோ. 9: 1—5 மத். 14: 22—33

வாழ்க்கைப் பயணத்தில் இருளும், ஒளியும், புயலும், அமைதியும் மாறி மாறி நிகழும் அன்றாட அனுபவங்கள். பல புதுப் புதுப் பிரச்சனைகள் எம்மைத் தனித்தனியாகவும், கூட்டாயும் பல்வேறு கோணங்களில் ஆட்டிப் படைக்கின்றன. இயற்கை அழிவு ஒரு புறம், மனிதனின் கொடுமைகள் இன்னொருபுறம். வாழ்வின் நடைமுறைகளைத் "துர்ப்பாக்கியம்" என்கிறோர்கள். அதனால், அவர்கள் தலையைப் பூமிக்குத் திருப்பி, சிந்தை குழம்பி, நோக்கங்கள் மழுங்கிச் சோகத்தில் மடிந்துவீழ்ந்து விடுகின்றனர். இன்னும் சிலர், தன் பலம், தனது வீரம் என மூழ்கி, ஆணவத் திமிரில் இறுமாப்படைய தீராத பிரச்சனைகளும் அவர்கள் கால்களைக் கொய்து விடுகின்றன.

காரிருள் சூழ்ந்த வேளையில், காற்றுப் பலமாக எதிர்க்க, சீடர்கள் நடுக்கடலில் தத்தளித்தார்கள். பலம் வாய்ந்த இயற்கையின் சக்தி முன், தாம் பலவீனர்கள் என்ற தனிமையும் அவர்களை வாட்டியது. "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்றவாறு சீடர்களது இடர்களைத் தீர்க்கக் கடல்மீது நடந்து வரும் இயேசுவைப் பார்த்து 'ஐயோ பூதம்' என்று அச்சத்தால் அலறினர்கள்.

ஆனாலும், படைப்புக்கள் அனைத்திற்கும் ஆண்டவன் இறைவன் அல்லவா? மனிதனை வாட்டும் அனைத்துத் தீமைகளையும் நொடிப் பொழுதில் ஓட்டி, அமைதி அளிக்கும் புதுமைப் பித்தன் இயேசு என்பதை உணராத சீடர்கள் பயந்தார்கள். இயேசுவோ "தைரியமாய் இருங்கள்" என்னும் இயேசுவின் குரலொலி எமது உள்ளத்தின் ஆழத்தில் எப்போதும் ஒலிக்க வேண்டும். அமைதியான தென்றலின் ஒலிகேட்க, எமது உள்ளக் குகைகட்குள் சற்று ஒடுங்க வேண்டும்.

இறைமகன் இயேசுவிலும், அவரது தெய்வீக வல்லமையிலும் எமக்கு விசுவாசம் அற்றுப் போகும் வேளைகளில் இயேசு என இனம் கண்ட இராயப்பரும் இயேசுவைப் போன்று கடல் மீது நடந்தார். ஆனால், பலமான காற்று அவர் உள்ளத்தில் இருந்த அற்ப விசுவாசத்தையும் பறக்கவைத்து விட்டது; இடறிப் போனார்.

இறைமகன் இயேசுவில் நாம் கொண்டுள்ள விசுவாசம் இராயப்பரது உணர்ச்சி அதிகப்படியான விசுவாசமாய் இருந்து விடக் கூடாது.

ஆலயம் சென்றால் மட்டுமே பக்திப்பரவசமும், கண்ணீரும், ஆனால், ஆலயத்திற்கு வெளியே ஆண்டவனைக் காண மறுக்கிறோம். வாழ்வில் வெற்றி என்றால் இறைபுகழ் பாடுகிறோம். ஆனால், ஏமாற்றம் என்றால் ஆண்டவனை நொந்து கொள்ளுகிறோம்.

இறைபிரசன்னத்தை உணரும் இதயம், ஆழ் கடலைப் போன்றது. மேலே பேரலைகள், கொந்தளிப்புக்கள்; ஆனால், ஆழத்தில் அடக்கம், அமைதி. இஸ்ரயேல் மக்களின் விசுவாசத்தைக் காக்க கடும் போர் புரித்த வீர இறைவாக்கினர் எலியாஸ். இவர் அமைதியான தென்றலிலே இறைவனை அனுபவித்தார்.

அலைபோன்று துன்பங்கள் எம்மை அணுகினாலும் ஓயாத வேலைப்பழு எம்மை அடிமைப்படுத்தினாலும் "தைரியமாய் இருங்கள்" என்னும் இயேசுவின் குரலொலி எமது உள்ளத்தின் ஆழத்தில் எப்போதும் ஒலிக்க வேண்டும். அமைதியான தென்றலின் ஒலிகேட்க, எமது உள்ளக் குகைகட்குள் சற்று ஒடுங்க வேண்டும்.

இறைமகன் இயேசுவிலும், அவரது தெய்வீக வல்லமையிலும் எமக்கு விசுவாசம் அற்றுப்

உங்களுக்குத் தெரியுமா போட்டி — 10

ஆடிமாதப் பாதுகாவலனிலிருந்து விடையைக் கண்டு பிடித்து வினு இலக்கத்தையும், சரியான விடையையும், தபால் அட்டையில் தெளிவாக எழுதி 15-8-87க்கு முன், பாதுகாவலன் அ. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். விடையும் பரிசு பெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 4-9-87 இல் வெளிவரும் பரிசு ரூபா 15/-

வினுக்கள்

1. "காத்தவன் காவியம்" நூல் ஆசிரியர் யார்?
2. சோவியத் குடியரசான எந்த நாட்டுக் குடிமக்கள் நற் செய்தியைப் பெற்று 600 ஆண்டு நிறைவை இவ்வாண்டு நினைவு கூருகின்றனர்?
3. தென் ஆபிரிக்க வெள்ளையின ஆட்சிக்கு எதிராகப் போராடும் நோபல் சமாதானப் பரிசுபெற்ற ஆயர் பெயர் என்ன?
4. 20 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சாதனை மார்க்க நூல்களை எழுதிய பிரசித்திபெற்ற யேசு சபைக் குருவின் பெயர் என்ன?
5. எல்லைக் காந்தியின் வயது என்ன?
6. சீனு, வியற்நாம் ஆகிய இடங்களில் திருச்சபையிற் பிளவை ஏற்படுத்தும் முக்கிய காரணி என்ன?


போட்டி 9 சரியான விடைகள்

1. இசையாஸ் 49 : 16
2. பிதா. பார்போஸா.
3. 25—5—1887.
4. ஆயர் ஓஸ்வால்ட் கோமிஸ்.
5. புனித மரிய கொறற்றி.
6. மரியாளின் ஆண்டை முன்னிட்டு.

உங்களுக்குத் தெரியுமா போட்டி - 9
சரியான விடைகள் எழுதியோர்

1. யே. யோக்கிம்தாசன், எமில்நகர், மன்னார்.
2. L. R. கொன்ஸ்ரன்ரைன்,
   873, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
3. திருமதி சிறியபுஷ்பம் சுகந்தரன்.
   அரசடி வீதி, நவாலி.
4. செல்வி கொலஸ்ரிக்கா பிலேந்திரன்.
   வட்டாரம் - 2, அல்லைப்பிட்டி.

பரிசுபெறும் நற்பேருளர்
செல்வி கொலஸ்ரிக்கா பிலேந்திரன்,
வட்டாரம் — 2, அல்லைப்பிட்டி.



கிறிஸ்துவில் அன்புள்ள "மரியாயின் மைந்தன்", 'ஜெபம்' அவர்களே, தங்களுக்கு, கிறிஸ்துவ தர்மத்தின் பெயராற் பதில் தருகிறேன்.

"தென் இலங்கையில் நூற்றுக்கணக்கான மக்கள், 32 பௌத்த குருக்கள் கொல்லப்பட்டார்கள். இதற்காக வட பகுதியில் பிணக் காடு, மரண ஓலம். இந்த இலட்சணத்தில் யாழ் மக்கள் அழிந்து கொண்டு இருக்கும் போது ஊர்வலம் நடத்த வேண்டுமா? முடியுமா?

அன்பர்களே! யாழ் நகர், கத்தோலிக்கத் திருச்சபை இங்கே பெரும் வேதனை அனுபவிப்

2ஆம் வருட நினைவஞ்சலி

பிரபல நாட்டுக்கூத்துக் கலைஞரும் முருங்கன் புனித யாகப்பர் ஆலய முன்னாள் சங்கீதமுமாகிய,



திரு. ம. செபஸ்தியான்
பிறப்பு: 04-05-1904
இறப்பு: 13-08-1986

எல்லாம்வல்ல இறைவா இவருக்கு நித்திய வாழ்வையும், நித்திய இன்பத்தையும் அளித்தருளும்.

இவரது பிரிவினால் துயருறும் உள்ளங்கள்

பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள், உற்றார் உறவினர்.

புனித யாகப்பர் கோவிலடி, முருங்கன்.

A/83

1ஆம் வருட நினைவு தினம்



சூசைப்பிள்ளை சுவாம்பிள்ளை
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

பிறப்பு: 04-12-1902
இறப்பு: 15-8-1986

அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் 14-8-87 வெள்ளிக்கிழமை காலை 8:30 மணிக்கு

கள்.

ஆனாலும், படைப்புக்கள் அனைத்திற்கும் ஆண்டவன் இறைவன் அல்லவா? மனிதனை வாட்டும் அனைத்துத் தீமைகளையும் நொடிப் பொழுதில் ஓட்டி, அமைதி அளிக்கும் புது மைப் பித்தன் இயேசு என்பதை உணராத சீடர்கள் பயந்தார்கள். இயேசுவோ ''தைரியமாய் இருங்கள்'' என உறுதிப் படுத்தினர்.

இருந்தும் ''தைரியமாய் இருங்கள்'' என்னும் இயேசுவின் குரலொலி எமது உள்ளத்தின் ஆழத்தில் எப்போதும் ஒலிக்க வேண்டும். அமைதியான தென்றலின் ஒலிகேட்க, எமது உள்ளக் குகைகட்குள் சற்று ஒடுங்க வேண்டும்.

இறைமகன் இயேசுவிலும், அவரது தெய்வீக வல்லமையிலும் எமக்கு விசுவாசம் அற்பமேனும் இருக்க வேண்டும்.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

யாழ். புனித மரியன்னை பேராலயப் பெருவிழா

"தாயே தயாபரியே
தஞ்சம் தாருமம்மா"

காலம் 6—8—87 முதல் 15—8—87
தினமும் மாலை 5-30 மணிக்கு
திருச்செபமாலை—திருப்பலி—தியானம்.

14—8—87 திருப்பலியுடன் நற்கருணை ஆராதனையும் பவனியும் இடம்பெறும்.

15—8—87 திருநாள் திருப்பலிகள்
காலை 5-30, 6-30, 7-30
மாலை 5-30
காலை 6-30 கூட்டுத் திருப்பலி.
மாலை 5-00 மரியன்னையின் திருச்சுரூபப்பவனி இடம்பெறும்

வாருங்கள் — சிந்திப்போம் — செபிப்போம் — வாழ்வோம்

பங்குத்தந்தை

A/90

கிறிஸ்துவில் அன்புள்ள "மரியாயின் மைந்தன்", 'ஜெபம்' அவர்களே, தங்களுக்கு, கிறிஸ்துவ தர்மத்தின் பெயராற் பதில் தருகிறேன்.

"தென் இலங்கையில் நூற்றுக்கணக்கான மக்கள், 32 பௌத்த குருக்கள் கொல்லப் பட்டார்கள். இதற்காக வடபகுதி மக்கள் ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்களா? நடத்த எண்ணினார்களா?''

அன்பரே, வடபகுதியில் உள்ள தமிழ் மக்களை ஏன் ஊர்வலம் செய்யக் கேட்கிறீர்கள்?

அவர்கள் கடந்த இரண்டு நீண்ட வருடங்களாக பம்பர் குண்டு வீச்சு, ஹெலிச் டு, ஷெல் அழிவு இவைகளால் தாக்கப்பட்டு, எஞ்சியோரை இராணுவந் தேடி அழித்தல், இளம் பிள்ளைகளைப் பூசாவுக்கு அனுப்புதல், விசாரணையின்றிச் சித்திரவதைப்படுத்தல் கடல் வலய கட்டுப்பாடு, 1000 மீற்றர் அடக்குமுறை, உயிர் வாழ்வோருக்கு உணவுத்தடை, அத்தியாவசிய பாவனைப் பொருள் தடை, வீடுகள் தரை மட்டம், பெரிய குடி மனைகள் புல்டோசரால் இடித்துத் தரை மட்டம், மக்களைப் பாதுகாப்பாகக் கோவில்களில் இருக்குமாறு கூறி அதே கோவில்களைக் குண்டு வீசி அழித்தல் இவை முதலிய இராணுவ நடவடிக்கைகளினால் வட பகுதியில் பிணக் காடு, மரண ஓலம். இந்த இலட்சணத்தில் யாழ் மக்கள் அழிந்து கொண்டு இருக்கும் போது ஊர்வலம் நடத்த வேண்டுமா? முடியுமா?

அன்பர்களே! யாழ் நகர், கத்தோலிக்கத் திருச்சபை இங்கே பெரும் வேதனை அனுபவிப்பதை நீங்கள் அறியீர்களா?

பதினேந்துக்கு மேற்பட்ட கோவில்கள் குண்டு வீசி அழிக்கப்பட்டன. வங்காலையில் அருள் திரு பஸ்ரியன் அடிகளார் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டார். எமது ஆயர் சடலத்தைக் கேட்டார். தமக்குத் தெரியாது என்று அரசாங்கம் சொன்னது.

தோலகட்டிச் செபமாலைத் தாசர் மௌன ஆச்சிரமத்து வண. துறவி வென்சஸ்லாஸ் கை கூப்பியபடி நிற்கச் சுட்டுக் கொல்லப் பட்டார். பரிசுத்த தேவநற்கருணையை வைத்து நித்திய ஆராதனை செய்து வந்தவர்கள் துரத்தப் பட்டு ஆயுதப்படையினர் அசுத்தமாக்கினர். இவை ஒன்று கூடக் கொழும்புக்குத் தெரியாதா? ஒரு வருத்தமும் இல்லையே. ஆனால், பசித்தவர்க்குப் போசனம் கொடுத்ததை உடனே தெரிந்து ஊர்வலம் வைத்தார்கள்.

மண்டைதீவு 32 மீனவர்களைக் கடலில் ஆயுதப்படையினர் வெட்டிக் கொன்ற சம்பவத்தைப் பரிசளிப்பு விழாவில், யாழ் ஆயர் கண்ணீருடன் கூறியவேளை, உடனே யாழ் ஆயர் கருத்துக்கும் எமக்கும் சம்பந்தம் இல்லை என்று கொழும்பு ஆயர் சங்கம் அறிவித்ததே! இது கிறிஸ்துவ தர்மம் ஆகுமா?

தமது கிறீஸ்துவின் உடலின் ஓர் அங்கம் வேதனைப்படும் போது வேதனையுறுது, வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல் ஊர்வலம் நடத்தலாமா? இது கிறீஸ்தவ தர்மமா?

வளன்
ஆனைக்கோட்டை.

சூசைப்பிள்ளை சுவாம்பிள்ளை
(இலைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

பிறப்பு: 04-12-1902
இறப்பு: 15-8-1986

அன்னாரின் ஆன்ம சாந்திக் காகப் பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் 14-8-87 வெள்ளிக்கிழமை காலை 6-30 மணிக்கு இரங்கற் பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவர் பிர்வால் துயருறும்
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்
பெரியவிளான்,
இளவாலை.

திருச்சபைச் செய்தியைத் தரும் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வாரப் பத்திரிகை

பாதுகாவலன்
PATHUKAVALAN

நற்செய்திப்பணி மகாநாடு

ஆசியாவின் ஆயர் பேரவையின் நற்செய்தி நிலையம் ஒவ்வொரு நாட்டிலும் திருச்சபையின் நிலைமைகளை ஆராயும் பொருட்டு அடுத்த மூன்று ஆண்டுகளிலும் பல மகாநாடுகளை நடத்தவுள்ளது.

நாட்டு மட்டத்தில் நடைபெறும் மகாநாடுகளுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக ஒரு கூட்டு மகாநாடு 1988 ஆகஸ்ட் 24-30 ஆம் திகதிகளில் தென் கொரியாவில் இடம் பெறும்.

இந்நிலையத்தின் தலைவரான இந்தியாவைச் சேர்ந்த திப்புருகார் மறைமாவட்ட ஆயர் தொமஸ் மேனம்பரம்பில், கொரியாவிலிருந்து ஏனைய நாடுகளுக்கு மாநாட்டின் செய்தியை எடுத்துச் சென்று, அவ்விடங்களில் நடக்கும் கருத்தரங்குகளிற்பிரச்சினைகளை ஆழமாக ஆராயச் சந்தர்ப்பம் உண்டு எனக் குறிப்பிட்டார்.

1988 இல் நடைபெறப் போகும் கருத்தரங்கு ஆசியாவில் நற்செய்திப்பணிபற்றி ஆராய்வதையே நோக்கமாக கொண்டுள்ளது. நற்செய்திப் பணியோடு தொடர்பாக, பண் பாட்டுமயமாக்குதல், காட்சித் தியான வாழ்வு, கல்வி, பொது நிலையினர் பணி முதலியனவும் ஆராயப்படும்.

ஆசியாவில் நற்செய்திப்பணி பற்றிக் குறிப்பிடுகையில் ஆயர் மேனம்பரம்பில் ''இது கிறிஸ்து வின் மூலம் கிடைத்த இறை வனின் கொடை. அதை எமது சகோதரரோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். எனவே, நாம் அவர்களை உள்ளபடியே ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவையும் அவரது முழு மையான அன்பையும் அவர் களுக்குக் காட்ட வேண்டும்'' எனக் கூறினார்.

''மக்களுட் சிலர் கிறிஸ்து வைப் பார்த்து வியப்பதோடு நின்று விடுகின்றனர். வேறு சிலர், அவரோடு இன்னும் நெருங்கிய உறவு கொள்ள விரும்பிக் கிறிஸ்தவர்களோடு ஒத்துழைக்கின்றனர். மேலும் சிலர் அவரின் சீடராக விரும்பு கின்றனர். எந்த விதத்தில் அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டாலும் அதனால் தம் வாழ்வு வளமடைவதாக உணர்கின்றனர்'' என அவர் மேலும் கூறினார்.

குருக்கள் பொதுநிலையினர் தொடர்பு

''இன்றைய சமூகத்திற் குருத்துவக் கல்வி'' என்பது பற்றி ஜகார்த்த நகரில் இடம் பெற்ற ஒரு கருத்தரங்கில், பேராயர் லியோ சோகோட்டோ குருக்கள், பொதுநிலையினரின் பிரச்சினைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

''தம்மோடு சேர்ந்து ஒத்துழைக்க முன் வருவோரை மட்டுமன்று, சகல மக்களையும் மதித்து, நம்பி அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். திருச்சபையில் அப்போஸ்தலராகச் செய்யும் பணியை மட்டுமன்று உலகிற் பொது மக்களாக ஆற் பிரச்சினை பற்றி அவர் ஆலோசனை கூற முடியும் என அவர்கள் கருதுவதில்லை.

அதேக இளங் குருமாருக்கு, இளைஞருக்கு வழிகாட்டப் போதிய தகுதியில்லை. முதியோரோ இளைஞரைப் புரிந்து கொள்வதில்லை.

ஆகவே, கத்தோலிக்கக் கல்விமான்கள், சமூக முன்னேற்றத்தையும் மாற்றங்களையும் பற்றிய விபரங்களைத் திருச்சபை அதிகாரிகளுக்கு அளிக்க வேண்டும். திருச்சபை தனது கொள்கைகளையும், தேவைகளையும் அவர்களுக்கு உணர்த்தி அவர்களைப் பணி

தொடர்புச்சாதனத் தினம்

உலகத் தொடர்புச் சாதனங்கள் தினம், பாரிஸ் தாவில் முதன்முறையாக மே 29 ஆம் திகதி கொண்டாடப் பட்டது. கத்தோலிக்கர் வெகுஜன தொடர்புச் சாதனங்களுடன் தொடர்புடையோருக்காகவும், சமூகத் தொடர்புக் கருவிகள் நன்முறையிற் பயன் படுத்தப் படும் படியாகவும் செபித்தனர்.

''நீதிக்கும் சமாதானத்திற் கும்சேவை செய்யத்தொடர்புச் சாதனங்கள்'' என்பதே 1987ஆம் ஆண்டு, தொடர்புச் சாதனங்கள் தினத்தின் மையக் கருத்தாகும்.

லாகூரில், புனித சின்னப்பரின் குமாரத்திகள், தொடர்புச் சாதன அப்போஸ்தலத்துவத்தைப் பற்றிப் பங்குகளில் உரையாற்றினர். தமது நூல்களையும் பதிவு நாடாக்களையும் காட்சிக்கு வைத்தனர்.

மே 29ம் திகதி தொடர்புச் சாதனங்களில் வேலை செய்வோர் அனைவரும், பேராலயத்தில் நிகழ்ந்த நற்கருணைப் பவிக்கு அழைக்கப்பட்டனர். அன்று முஸ்லீம் பெருநாளான ஈத் தினமாக இருந்தபோதிலும், அநேகர் பங்குபற்றினர். கத்தோலிக்க ஒலிபரப்புச் சங்கத்தினர், நடிகர்கள், எழுத்தாளர்கள், வீடியோ விற்பனையாளர் முதலியோர் சமூகமளித்தனர்.

காணிக்கைப் பவனியின் போது இறைவனுக்குத் தமது ஆக்கத்திறன்களை அர்ப்பணிக்கும் முகமாக, ஓர் ஒளிப்பதிவு நாடா, ஒரு பேனை, காகிதம், இசைக் கருவிகள் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டன.

அவர்களுக்கு உரை நிகழ்த்திய, சமூக தொடர்புக்காரிய தரிசியான பிதா சல்டன்ஹா ''கிறிஸ்தவ தொடர்புச்சாதனப் பணியாளருக்கு அதிக ஆற்றலுண்டு. ஆனால், அவர்கள் பிறரால் ஏற்கப்பட வேண்டுமானால், தமது தொழிலில் திறமை பெற முயல வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

ரஷ்யாவில் ஆழமான விசுவாசம்

சோவியத் ரஷ்யாவில் பத்து நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிலிப்பின்ஸ் கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர் மணிலா கர்தினல் காமேயல் சின் அந்நாட்டிற் கத்தோலிக்க விசுவாசம் எத்தனை ஆழமாக வேரூன்றி இருக்கிறது. என்பது பற்றி விளக்கியிருக்கிறார்.

பத்து நாள்களிற் பல்வேறு சமய நிகழ்ச்சிகளிற் பங்கு கொண்ட கர்தினல் காமேயல் சின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நூற்றுக் கணக்கிற் சுதந்திரமாக விசுவாசிகள் பங்கேற்ற தாகவும், நிரம்பி வழியும் ஆலயங்கள் மிக நல்ல முறையிற் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். சில நிகழ்ச்சிகளில் விசுவாசிகளின் சமய நம்பிக்கைகளின் வெளிப்பாட்டையும், அன்பையும் அனுபவித்த போது கதறி அழும் நிலைக்குத் தான் தள்ளப் பட்டதாகவும் அவர் சொன்னார். சோவியத் ஆர்தடக்ஸ் திருச்சபையினரது அழைப்பின் விளைவாக, விரைவில் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அங்கே சுற்றுப் பயணஞ் செய்யும் வாய்ப்புக்கள் உள்ளன என்றும் கர்தினல் சின் கூறினார். ஆனால், திருத்தந்தையின் சோவியத் பயணம் குறித்துச் சோவியத் அரசு உயர் அலுவலர்களுடனே, சோவியத் திருச்சபைத் தலைவர்களுடனே தான் ஏதும் விவாதிக்க வில்லை என்றும் கர்தினல் சின் தெரிவித்தார்.

பேராயரைக் கைது செய்ய முடியாது

1982ஆம் ஆண்டு வத்திக்கான் அரசவங்கி பெருமளவு முதலீடு செய்திருந்த ''பங்கோ அம்புரோசியானே'' என்ற இத்தாலிய வங்கி நஷ்டமடைந்தது. இந்த பங்கோ அம்புரோசியானே வங்கிக்கு ஏற்பட்ட இழப்புக்களிற் பேராயர் போல் மார்சன் கூஸ் பெரிதும் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறி, அவரைக் கைது செய்வதற்காக இத்தாலி நாட்டின் குற்றவியல் நீதிமன்றங்கள் சில, பிறப்பித்திருந்த பிடி ஆணையை இத்தாலிய உச்ச நீதி மன்றம், நேற்று நிராகரித்தது. வத்திக்கான் தனி அரசு என்பதால், அதன் நிர்வாகி ஒருவரைக் கைது செய்யும் அதிகாரம் இத்தாலிய பொலிசாருக்கு இல்லை என்று பிடி ஆணையை ரத்துச் செய்து இத்தாலிய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. பேராயர் போல் மார்சன் கூஸ் உடன் இணைந்து பணியாற்றிய வேறு வத்திக்கான் அதிகாரிகள் இருவருக்கு இருந்த பிடி ஆணையையும் இத்தாலிய உச்ச நீதிமன்றம் நிராகரித்திருக்கிறது. இப்பொழுது வத்திக்கானிலிருக்கும் பேராயர் போல் மார்சன் கூஸ், இனிப் பொலிசாராற் கைது செய்யப்படும் அபாயம் ஏதுமின்றி வத்திக்கானை விட்டு வெளியே செல்லலாம்.

குருக்கள்

சிறைச்சாலை தரிசித்தனர்

சிறையிலுள்ள மக்களது வாழ்க்கையைப் பற்றி நேரடியாகஅறியும்பொருட்டுச்சுமார் 20 கத்தோலிக்க குருக்கள் ஹொங்கொங்கிலுள்ள இரு சிறைச்சாலைகளைத் தரிசித்தனர். இத்தரிசனை, சிறைச்சாலை ஆன்மகுரவர்களான பிதா ஸ்டீவன் எட்மண்ட்ஸ், பிதா பீற்றர் நியுபெரி ஆகியோரால் ஒழுங்கு செய்யப்பட்டது. இத்தகைய தரிசனைகளின்மூலம், சிறைச்சாலைச் செயற்பாடுகளையும் கைதிகளின் பிரச்சினை

பேராயர் லியோ சோகோட்டோ குருக்கள், பொதுநிலையினரின் பிரச்சினைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

"தம்மோடு சேர்ந்து ஒத்துழைக்க முன் வருவோரை மட்டுமன்று, சகல மக்களையும் மதித்து, நம்பி அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். திருச்சபையில் அப்போஸ்தலராகச் செய்யும் பணியை மட்டுமன்று உலகிற் பொது மக்களாக ஆற்றும் பணியையும் குருக்கள் அவர்களுக்கு உணர்த்த வேண்டும்" என அவர் மேலும் கூறினார்.

"எத்தனையோ பிரச்சினைகளுள்ள தம்பதிகள் சட்ட ஒழுங்குகளைக் குறித்துக் குரு விடம் ஆலோசனை கேட்க வருகிறார்களே யொழிய, குடும்பப் இளைஞருக்கு வழிகாட்டப் போதிய தகுதியில்லை. முதியோரோ இளைஞரைப் புரிந்து கொள்வதில்லை.

ஆகவே, கத்தோலிக்கக் கல்விமான்கள், சமூக முன்னேற்றத்தையும் மாற்றங்களையும் பற்றிய விபரங்களைத் திருச்சபை அதிகாரிகளுக்கு அளிக்க வேண்டும். திருச்சபை தனது கொள்கைகளையும், தேவைகளையும் அவர்களுக்கு உணர்த்தி அவர்களைப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். பொதுநிலையினர் பணி சமயப் பணியாகவே இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. தொழுமை, கட்டுப்பாடு, நேர்மை, நீதி முதலிய கிறிஸ்தவ மதிப்பீடுகளைப் பரப்புவது மிக முக்கியமானது எனவும் அவர் கூறினார்.

மடுத்திருப்பதி ஆவணித் திருவிழா

வழமைப் பிரகாரம், மருதமடு அன்னையின் திருவிழா நவ நாள் வழிபாடுகளுடன் ஆரம்பமாகி 15—8—87 அன்று திருநாள் திருப்பலி, திருச்சுரூபப் பவனியுடன் இடம்பெறும்.

புனித மரியாவின் ஆண்டை முன்னிட்டு நடைபெறும் விசேட ஆராதனைகளில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அழைக்கிறோம்.

போக்குவரத்து, உணவு, சுகாதார சேவைகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

மடுத்திருப்பதிப் பரிபாலகர்

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

லே வங்கிக்கு ஏற்பட்ட இழப்புக்களிற் பேராயர் போல் மர்சன் கூஸ் பெரிதும் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறி, அவரைக் கைது செய்வதற்காக இத்தாலி நாட்டின் குற்றவியல் நீதிமன்றங்கள் சில, பிறப்பித்திருந்த பிடி ஆணையை இத்தாலிய உச்ச நீதி மன்றம், நேற்று நிராகரித்தது. வத்திக்கான் தனி அரசு என்பதால், அதன் யர் போல் மர்சன் கூஸ் உடன் இணைந்து பணியாற்றிய வேறு வத்திக்கான் அதிகாரிகள் இருவருக்கு இருந்த பிடி ஆணையையும் இத்தாலிய உச்ச நீதிமன்றம் நிராகரித்திருக்கிறது. இப்பொழுது வத்திக்கானிலிருக்கும் பேராயர் போல் மர்சன் கூஸ், இனிப் பொலிசாராற் கைது செய்யப்படும் அபாயம் ஏதுமின்றி வத்திக்கானை விட்டு வெளியே செல்லலாம்.

பொருளாதார நெருக்கடி

ஜயபுரா, இந்தோனேசியா கத்தோலிக்கப் பாடசாலைகளைத் தொடர்ந்து நடத்துவதில் அதன் இரியன் ஜயாவிலுள்ள நான்கு ஆயர்களுக்கும் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக ஜயபுராவின் ஆயரான ஹேர்மன் மணிங்ஹொவ் கூறியுள்ளார். நிதிக்குறைபாடும், அரசாங்கத்தின் தரப்படுத்துதலும் இந்நெருக்கடிக்கு முக்கிய காரணங்களாகும். எத்தனையோ கத்தோலிக்க பாடசாலைகள் அரசாங்கத்துக்குக் கையளிக்கப்பட்டுவிட்டன. ஏனையவற்றை நடாத்துவதிலும் பெரும் சிரமங்கள் தோன்றியுள்ளன.

நியுகினி தீவின் மேற்குப் பாகமான இரியன் ஜயா, இந்தோனேசியாவின் அபிவிருத்தி குன்றிய மாகாணமாகும். அதன் 13 இலட்சம் சனத்தொகையில் 23 வீதம் கத்தோலிக்கரும் 64 வீதம் புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவருமாவர்.

இங்கு, கத்தோலிக்க பாடசாலைகள் முதன் முதலாக 1910இல் நிறுவப்படலாயின. டச்சு அரசாங்கம் 50 ஆண்டுகளாக அவற்றிற்கு நிதியுதவி அளித்து வந்தது. இரியன் ஜயா, இந்தோனேசியாவின் ஒரு பகுதியான பின்னர் இந்த உதவி படிப்படியாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

"எம் கருத்து," குறள் தெளிவுரை

நல்ல வழியால் ஆராய்ந்து அருளுடையவர்களாக விளங்க வேண்டும்;

பல வழிகளால் ஆராய்ந்து கண்டாலும் அருளே வாழ்க்கைக்குத் துணையாக உள்ளது. (242)

யாகஅறியும்பொருட்டுச்சுமார் 20 கத்தோலிக்க குருக்கள் ஹொங்கொங்கிலுள்ள இரு சிறைச்சாலைகளைத் தரிசித்தனர். இத்தரிசனை, சிறைச்சாலை ஆன்மகுரவர்களான பிதாஸ்டீவன் எட்மண்ட்ஸ், பிதா பீற்றர் நியுபெரி ஆகியோரால் ஒழுங்கு செய்யப்பட்டது. இத்தகைய தரிசனைகளின்மூலம், சிறைச்சாலைச் செயற்பாடுகளையும் கைதிகளின் பிரச்சினைகளையும் அறிந்து கொள்வதே அவர்களது நோக்கம். அவர்கள் முதன்முறையாக 1600 ஆண் கைதிகளைக் கொண்ட ஸ்டான்லி சிறையைத் தரிசித்தனர். இரண்டாம் முறையாக அவர்கள் லாய் சிகோக் சிறையைத் தரிசித்தனர்.

சிறைச்சாலைக்கு ஆன்ம குரவர்களைத் தேடுவது இத் தரிசனையின் நோக்கமல்லவெனினும் இருவர் முழு நேரப்பணி புரிய முன் வந்தனர்.

கைதிகளுள் 85 வீதமானவர்கள் ஒரு சமயத்தையும் அனுசரியாதவர்கள். ஏனையோர் கிறிஸ்தவர்கள் அல்லது பௌத்தர்கள். இவர்கள் மட்டிற் சமயப்பணியை விட, மனித முன்னேற்றமே செய்ய வேண்டியுள்ளது எனப் பிதா நியூபெரி குறிப்பிட்டார். இவர் தமது பணிக்காகப் பிரித்தானிய அரசினற் கௌரவிக்கப்பட்டார்.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்